சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

## மானியக் கோரிக்கை எண். 29

## டாக்டர் மா. மதிவேந்தன்
சுற்றுலாத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# சுற்றுலா

# மானியக் கோரிக்கை எண்.29

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2022-2023

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இந்தியாவில் சுற்றுலா | 2 |
| 3. | தமிழ்நாட்டில் சுற்றுலா | 4 |
| | 3.1 சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள் | 12 |
| | 3.2 உத்திகள் | 13 |
| 4. | தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை | 14 |
| 5. | பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 22 |
| | 5.1. சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்படும் விழாக்கள் | 23 |
| | 5.1.1 இந்திய நாட்டிய விழா | 23 |
| | 5.1.2. நம்ம ஊரு திருவிழா | 24 |
| | 5.1.3. கோடை விழாக்கள் | 25 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| | 5.1.4. விழாக்கள் குறித்த விவரங்கள்: (2021–2022) | 26 |
| | 5.2. உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல் | 27 |
| | 5.2.1. உள்நாட்டு பயணச்சந்தைகள் / கண்காட்சிகள் (2021–2022) | 27 |
| | 5.3. சர்வதேச பயணச்சந்தைகள் | 29 |
| | 5.3.1. சர்வதேச பயணச் சந்தைகள்/ கண்காட்சிகள் (2021–2022) | 30 |
| | 5.4. விருதுகள் | 32 |
| 6. | உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள் | 33 |
| 7. | பொங்கல் சுற்றுலா விழா | 36 |
| 8. | சர்வதேச விளம்பரங்கள் | 37 |
| | 8.1 தமிழ்நாட்டினை விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக இந்திய தூதரகங்கள் மூலம் விளம்பரப்படுத்துதல் | 37 |
| | 8.2. பிரெஞ்சு சந்திப்பு 2022 | 38 |
| | 8.3. செக் சுற்றுலாத் துறையுடன் ஒருங்கிணைப்பு | 39 |
| | 8.4 வங்காள தேசத்தின் தேசிய தின கொண்டாட்டங்கள் | 39 |
| 9. | சுற்றுலா விளம்பரங்கள் | 40 |
| | 9.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம் | 41 |





| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| | 9.2 விளம்பர காணொளிகள் | 41 |
| | 9.3 மெய்நிகர் (Virtual Reality ) சுற்றுலாக்கள் | 42 |
| | 9.4 ஆக்மென்டட் ரியாலிட்டி (Augmented Reality) போஸ்ட் கார்டுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் | 43 |
| | 9.5 பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் | 43 |
| | 9.6 ரேடியோ மிர்ச்சி வானொலி பிரச்சாரம் | 44 |
| | 9.7 சமூக ஊடக பிரச்சாரங்கள் | 45 |
| | 9.8 Out of Home (OOH) விளம்பரம் | 49 |
| 10. | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி | 51 |
| 11. | சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு | 53 |
| 12. | மனித வள மேம்பாடு | 54 |
| | 12.1 திறன் மேம்பாட்டுப் படிப்புகளின் பட்டியல் | 55 |
| 13. | சுற்றுலா உள்கட்டமைப்பு | 57 |
| | 13.1 தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம் | 57 |
| | 13.1.1. சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2021–2022) ஒப்பளிக்கப்பட்ட பணிகள் விபரம் | 58 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| | 13.2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு | 60 |
| | 13.3.சுற்றுலா செயல்பாட்டாளர் – களுக்கான பதிவு மேற்கொள்ள வழிகாட்டுதல்கள் | 60 |
| | 13.4. 300 தலங்களுக்கான பெருந்திட்டம் | 64 |
| | 13.5. சுற்றுலா விருதுகள் | 65 |
| | 13.6 ஒன்றிய அரசின் நிதி உதவித் திட்டம் | 65 |
| | 13.6.1. சுவதேஷ் தர்ஷன் திட்டம் | 65 |
| 14. | முன்மொழியப்பட்ட திட்டங்கள் | 67 |
| | 14.1. 'பிரசாத்' (PRASAD) திட்டத்தின் கீழ் இராமேஸ்வரம் மேம்பாடு | 67 |
| | 14.2. மாமல்லபுரத்தை ஒரு அடையாளச் சின்னமாக (Iconic Site) மேம்படுத்துதல் | 68 |
| 15. | மாநில சுற்றுலாக் கொள்கை | 68 |
| 16. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 69 |
| 17. | ஓட்டல் பிரிவு | 70 |
| | 17.1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை மேம்படுத்துதல் | 72 |
| 18. | படகு குழாம்கள் | 72 |
| | 18.1 படகு குழாம், முட்டுக்காடு | 73 |
| | 18.2 படகு குழாம், முதலியார்குப்பம் | 74 |





| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| | 18.3 படகு குழாம், உதகமண்டலம் | 75 |
| | 18.4 படகு குழாம், பைக்காரா | 76 |
| | 18.5 படகு குழாம், கொடைக்கானல் | 77 |
| | 18.6 படகு குழாம், ஏற்காடு | 78 |
| | 18.7 படகு குழாம், பிச்சாவரம் | 79 |
| | 18.8 படகு குழாம், குற்றாலம் | 79 |
| | 18.9 தொலைநோக்கி இல்லம் | 80 |
| | 18.10 நீலக்கொடி கடற்கரை, கோவளம் | 81 |
| 19. | சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு | 83 |
| | 19.1 சுற்றுலா தொகுப்புகள் | 85 |
| | 19.1.1 தினசரி திருப்பதி சுற்றுலா | 85 |
| | 19.1.2 சிறப்பு தரிசன சீட்டுகள் | 86 |
| | 19.1.3 தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களிலிருந்து தொகுப்பு சுற்றுலாக்கள் | 87 |
| 20. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைபடுத்தும் முயற்சிகள் | 90 |
| | 20.1. விடுமுறை இல்லம் – முன்வைப்பு விடுதித் திட்டம் | 92 |
| 21. | பொருட்காட்சிப் பிரிவு | 95 |
| 22. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்னாளுமை முயற்சிகள் | 97 |
| 23. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள் | 100 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| | 23.1. வாலாங்குளம் ஏரி படகு குழாம் | 100 |
| | 23.2. முதலியார் குப்பம் கடற்கரை தீவில் வசதிகளை மேம்படுத்துதல் | 101 |
| | 23.3. புதிய வகை படகுகள் வாங்குதல் | 101 |
| 24. | முடிவுரை | 102 |
| | இணைப்பு–1 சுற்றுலாத்துறை நிருவாக அமைப்பு | 104 |
| | இணைப்பு–2 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக நிறுவன அட்டவணை | 105 |
| | இணைப்பு–3 சுற்றுலா அலுவலகங்கள் | 106 |
| | இணைப்பு–4 சுற்றுலா தகவல் மையங்கள் | 108 |




**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை**

**மானியக் கோரிக்கை எண்: 29**

**சுற்றுலா**

**கொள்கை விளக்கக் குறிப்பு – 2022–2023**

## 1. முன்னுரை

பொருளாதாரம் தழுவிய தாக்கத்தை உருவாக்குவதற்கும், உள்ளூர் சமூகங்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் தனித்துவமான ஆற்றலை சுற்றுலாத்துறை கொண்டுள்ளது. 2020–ல் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத் தொழிற் துறையின் பங்கு 5.5 சதவிகிதம் (4.7 டிரில்லியன் USD) ஆகவும், 272 மில்லியன் (மொத்த வேலைவாய்ப்பில் 8.9 சதவிகிதம்) வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் உலக பயண மற்றும் சுற்றுலா அமைப்பு (WTTC) தெரிவித்துள்ளது.

ஓய்வுநேர பொழுதுபோக்கு பயணம், மாறுபட்ட பயண விருப்பங்கள், நிலையான சுற்றுலாவினை மேம்படுத்துதல், அனுபவ சுற்றுலாவின் வளர்ச்சி மற்றும் பிரபலமடைந்து வரும் பல்வேறு சுற்றுலாக்களின் அனுபவங்கள் ஆகியவை உலகளாவிய சுற்றுலாத் தொழிற் துறையின் வளர்ச்சியில் அடங்கும்.

**2. இந்தியாவில் சுற்றுலா**

வேலைவாய்ப்புகளை அளித்தல், அன்னியச் செலாவணி ஈட்டுதல் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கியப் பங்காற்றுகிறது. 2020–ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.7 சதவிகிதம் பங்களிப்பின் மூலம் 121.9 பில்லியன் அமெரிக்க டாலர் வருமானத்தை சுற்றுலாத் துறை ஈட்டியுள்ளது. மேலும், 31 மில்லியன் வேலை வாய்ப்புகளை வழங்கி, மொத்த வேலைவாய்ப்பில் 7.3 சதவிகிதம் பங்களித்துள்ளது என்று உலக பயண மற்றும் சுற்றுலா அமைப்பு (WTTC) கூறியுள்ளது.



2019–ஆம் ஆண்டில், சுற்றுலாத் தொழிற்துறையின் மூலம் 30.1 பில்லியன் அமெரிக்க டாலர் அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்திய சுற்றுலாத் தொழிற்துறையின் மதிப்பானது 194 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 2028–ஆம் ஆண்டில் 460 பில்லியன் டாலராக உயர்வடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2028–ஆம் ஆண்டுக்குள் சுற்றுலாத் தொழிற்துறையில் 50 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் பணியாற்றுவார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. 2019–ஆம் ஆண்டிற்கான உலக பயண மற்றும் சுற்றுலா அமைப்பு (WTTC) வெளியிட்ட பயண மற்றும் சுற்றுலா போட்டித்திறன் அறிக்கையின்படி, 140 நாடுகளுள் இந்தியா 34–வது தரவரிசையில் உள்ளது.

இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம், சுற்றுலாவையும், பல்வேறு சுற்றுலாத் தலங்களையும்

மேம்படுத்த தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குகிறது.

மத்திய சுற்றுலா அமைச்சகம், பல்வேறு சுற்றுலா பங்குதாரர்களான ஒன்றிய அமைச்சகங்கள்/ நிறுவனங்கள், மாநில அரசுகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் ஆகியோர்களின் ஒத்துழைப்புடன் கருத்துக்களை பெற்று சுற்றுலாத்துறையை மேம்படுத்துகிறது. இந்தியாவிலும், வெளிநாட்டிலும் சுற்றுலாவை பிரபலப்படுத்த "உன்னதமான இந்தியா" என்ற பிரச்சாரத்தினை சுற்றுலா அமைச்சகம் பிரபலப்படுத்துகிறது.

### 3. தமிழ்நாட்டில் சுற்றுலா

இந்தியாவின் முன்னோடி சுற்றுலாத் தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இம்மாநிலம் பல்வகையான சுற்றுலா தலங்கள், பிரம்மாண்ட கோயில்கள், மலை வாசஸ்தலங்கள், வனங்கள், புல்வெளிகள் மற்றும் கடற்கரைகள் போன்ற



பல்வகைப்பட்ட சுற்றுலாத் தலங்களைக் கொண்டுள்ளது. பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு இடங்கள் இம்மாநிலத்தில் உள்ளன.

1. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில் போன்ற 36,627–க்கும் மேற்பட்ட புராதன கோயில்கள் உள்ளன.
2. சென்னை, மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி வரையில் 1076 கி.மீ நீளமுள்ள கடற்கரையை கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடற்கரைகளின் நீளத்தில் 13 சதவிகிதத்திற்கும் அதிகமானதாகும்
3. சுற்றுச்சூழல் சுற்றுலா (வனவிலங்கு சுற்றுலா உட்பட) – இம்மாநிலத்தில் 15 வன விலங்கு சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 15 பறவைகள் சரணாலயங்கள் மற்றும் 5 புலிகள் காப்பகங்கள் உள்ளன.

4. பாரம்பரியச் சுற்றுலா – மாமல்லபுர நினைவுச் சின்னங்கள், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், அரியலூர் மாவட்டம்–கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் கோயில், தாராசுரத்தில் உள்ள ஐராவதீஸ்வரர் கோயில், நீலகிரி மலை இரயில் ஆகிய யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட ஐந்து உலக பாரம்பரிய சின்னங்களும் இந்திய தொல்லியல் துறையின்கீழ் உள்ள 411 நினைவுச் சின்னங்களும் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

வருங்காலங்களில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக பத்து சுற்றுலாப் பிரிவுகளை சுற்றுலாத் துறை அடையாளம் கண்டுள்ளது.

1. பாரம்பரியம் மற்றும் ஆன்மீக சுற்றுலா
2. கடற்கரை சுற்றுலா
3. சாகசச் சுற்றுலா
4. சுற்றுச்சூழல் மற்றும் வனச் சுற்றுலா
5. மருத்துவம் மற்றும் உடல்நலம் பேணும் (Medical & Wellness) சுற்றுலா



6. வணிகச் (MICE) சுற்றுலா
7. கிராமிய மற்றும் மலை தோட்டப்பயிர் சுற்றுலா
8. கேரவன் (Caravan) சுற்றுலா
9. பண்பாட்டுச் சுற்றுலா
10. உணவுச் சுற்றுலா

**உள்நாட்டு சுற்றுலா**

2020 ஆம் ஆண்டில், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இது மொத்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 23 சதவிகிதம் ஆகும். மொத்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2015–ல் 333 மில்லியனிலிருந்து 2019–ல் 495 மில்லியனாகவும், ஒருங்கிணைந்த வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) 10 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

**சர்வதேச சுற்றுலா:**

2020–ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. இது இந்தியாவிற்கான மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 17.1 சதவிகிதம் ஆகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2015–ல் 5 மில்லியனிலிருந்து 2019–ல் 7 மில்லியனாகவும், ஒருங்கிணைந்த வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) 10 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

**விமான நிலையங்கள்:**

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு பன்னாட்டு விமான நிலையங்களும், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய இரண்டு உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன.



**துறைமுகங்கள்:**

சென்னை, தூத்துக்குடி மற்றும் எண்ணூர் ஆகிய இடங்களில் மூன்று பெரிய துறைமுகங்களும், 19 சிறிய துறைமுகங்களும் இம்மாநிலத்தில் உள்ளன.

**ரயில் இணைப்புகள்:**

தேசிய அளவிலான சராசரி விகிதத்தை விட அதிகமான ரயில் இணைப்புகளை தமிழ்நாடு கொண்டுள்ளது. சென்னையை தலைமையிடமாக கொண்டுள்ள தெற்கு ரயில்வே, 4000 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட நன்கு மேம்படுத்தப்பட்ட ரயில் இணைப்புகள் மூலம் மாநிலத்தின் அனைத்து இடங்களையும் இணைக்கின்றது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவை முக்கிய ரயில்வே சந்திப்புகளாகும்.

**சாலை இணைப்புகள்:**

தமிழ்நாட்டின் 66,039 கி.மீ கொண்ட நன்கு மேம்படுத்தப்பட்ட சாலை இணைப்பு மாநிலத்திலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் இணைக்கின்றன.

தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அவர்கள் செலவிடும் திறன் மற்றும் தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை அதிகரிக்கவும் சுற்றுலாத் துறை பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. சுற்றுலாத் துறை பெரும் ஊக்கத்தை அளித்து, முனைப்பான சுற்றுலா மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்துவதற்கான பிரச்சாரங்கள், சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை உருவாக்கியதன் பயனாக தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.



**சுற்றுலாத் துறை**

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் 01.04.1995–ல் சுற்றுலாத் துறையும் 30.06.1971–ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் உருவாக்கப்பட்டன. நிர்வாக அமைப்பு விவரம் அட்டவணை இணைப்பு–I மற்றும் இணைப்பு– II –ல் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் முக்கிய பெருநகரங்களில் சுற்றுலாத் துறையின் கீழ் 38 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 22 சுற்றுலா தகவல் மையங்கள் உள்ளன. சுற்றுலா குறித்த தகவல்களை அளித்தல், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், கண்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்துதல், பயணச் சந்தைகளில் பங்கேற்றல், பிற மாநில சுற்றுலாத் துறைகளுடன் தொடர்பில் இருத்தல் மற்றும் பிற சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை இவ்வலுவலகங்கள் மூலம் சுற்றுலாத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் பட்டியல் இணைப்பு–III மற்றும் இணைப்பு–IV–ல் அளிக்கப்பட்டுள்ளன.

### 3.1. சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள்

- தேசிய மற்றும் உலகளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்.
- தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பண்பாடு, பாரம்பரியம் மற்றும் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்களின் கட்டடக்கலையினை காட்சிப்படுத்துதல்.
- மாநிலத்தில், புதிய சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்.
- அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.
- தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, உலகத்தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.



- நாட்டின் அந்நியச் செலாவணியினை பெருக்குதல்.
- சுற்றுலாத் தொழில் துறையில், வேலைவாய்ப்புகளை பெருக்குவதற்கான வழிவகைகளை உருவாக்குதல்.

### 3.2. உத்திகள்

- சுற்றுலாச் சுற்றுக்களில் ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- மேம்படுத்தப்பட்ட இணைப்பு, உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் சுற்றுலா நட்புச் சேவைகளை அளித்தல்.
- பல்வேறு முகமைகளுக்கிடையே ஒத்துழைப்புடன் கூடிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார ரீதியான நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலாவில் தனியார் மற்றும் உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- திறன் வளர்ச்சி மற்றும் மனிதவள மேம்பாடு.
- உள்நாடு, வெளிநாடுகளில் நடைபெறும் வர்த்தக சந்திப்புகள், சுற்றுலா சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில்

பங்கேற்று தமிழ்நாட்டினை விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.

- சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல்.
- சுற்றுலா சார்ந்த கூட்டங்கள், ஊக்கத்தொகை, மாநாடுகள், கண்காட்சிகள் (MICE–Meetings, Incentives, Conventions, Exhibitions) மற்றும் வணிக வாய்ப்புகள் மிகுந்த சுற்றுலாப் பிரிவுகளை (Niche Tourism) ஊக்கப்படுத்தி மேம்படுத்துதல்.

**4. தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை:**

ஒவ்வொரு வருடமும் அதிக அளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிகின்றனர். தமிழ்நாட்டிற்கான சுற்றுலாப் பயணிகள் வருகையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா, ஜெர்மனி, ரஷ்யா, இலங்கை மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன.



2019–ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முதல் இடத்தையும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இரண்டாவது இடத்தையும் தமிழ்நாடு பெற்றது. 2020–ஆம் ஆண்டில் கோவிட் வைரஸ் தொற்று கட்டுப்பாடு இருந்த போதிலும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் முதலிடத்தையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இரண்டாம் இடத்தையும் தமிழ்நாடு பெற்றது. தமிழ் நாட்டிற்கு வருகைபுரியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கோவிட் கட்டுப்பாடுகள் காரணமாக 2021–ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக குறைந்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகளின் விவரம் : –

| ஆண்டு | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | |
| 2017 | 3450.61 | 48.60 | 3499.21 |
| 2018 | 3859.09 | 60.73 | 3919.82 |
| 2019 | 4948.64 | 68.66 | 5017.30 |
| 2020 | 1406.51 | 12.28 | 1418.79 |
| 2021# | 1153.36 | 0.57 | 1153.93 |

# – தற்காலிகமானது.

**நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்**:

சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் வளர்ச்சியை அடைவதற்கான நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை (SDGs) ஐக்கிய நாடுகள் சபை வகுத்துள்ளது. 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கமாக கொண்ட வறுமை, பசி, சுகாதாரம், கல்வி,



புவி வெப்பமடைதல், பாலின சமத்துவம், நீர், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதி உள்ளிட்ட பல்வேறு சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி பிரச்சினைகளுக்கு பயனுள்ள தீர்வுகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. முக்கிய நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் ஒன்றான, SDG8-ல், நீடித்த, உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது மற்றும் அனைவருக்கும் வேலை வாய்ப்புகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநில திட்டக்குழு, சுற்றுலாத் துறைக்கு பின்வரும் இலக்கினை நிர்ணயித்துள்ளது.

"2030–க்குள், நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் கொள்கைகளை வகுத்து செயல்படுத்துதல்"

இந்த இலக்கை அடைய, சுற்றுலாத் துறையால் எடுக்கப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கையானது அனைத்து செயல்பாடுகளிலும், முன்முயற்சிகளிலும் நிலைத்தன்மையை அடிப்படைக் கோட்பாடாக இணைத்து, உள்ளடக்கிய சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் பன்மடங்கு விளைவை ஏற்படுத்தும் முயற்சிகளை இக்கொள்கை பரிந்துரைக்கிறது.
2. சுற்றுலா தொடர்பான பல்வேறு செயல்பாடுகளில் இளைஞர்கள் தேவையான திறன்களைப் பெற்று, இத்துறையில் வேலை வாய்ப்புகளைப் பெறவும், தேவையான திறன் மேம்பாட்டுப் படிப்புகளின் பட்டியலை தமிழ்நாடு சுற்றுலா இணையதளத்தில் சுற்றுலாத் துறை வெளியிட்டுள்ளது.



3. மாநிலத்தின் உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு மின்னணு ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் விளம்பர காணொளிகளை தமிழ்நாடு சுற்றுலா வெளியிட்டுள்ளது. வசீகரிக்கும் நிலப்பரப்புகள், அற்புதமான கலாச்சார பாரம்பரியம், பிரமிக்க வைக்கும் கட்டடக்கலை, அழகிய கடற்கரைகள், மருத்துவ குணமிக்க நீர்வீழ்ச்சிகள், பாரம்பரிய கலை வடிவங்கள், புகழ்பெற்ற கைவினைப்பொருட்கள் மற்றும் உணவு வகைகளை காட்சிப்படுத்துவதன் மூலம் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகள் காணொளிகளில் இடம்பெற்றுள்ளன.
4. சுற்றுச்சூழல் மற்றும் சாகசச் சுற்றுலா போன்ற முக்கிய சுற்றுலாப் பிரிவுகளை அதிகம் பிரபலமடையாத இடங்களில் செயல்படுத்துவதின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படுகிறது.

இந்த இலக்கை அடைய சுற்றுலாத் துறை மேற்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக, தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது. 2020-ஆம் ஆண்டில், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தை அடைந்தது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 140 மில்லியனாகவும், இது மொத்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 23 சதவிகிதம் ஆகும். 2020-ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இரண்டாவது இடத்தையும் இம்மாநிலம் அடைந்தது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 1.2 மில்லியனாகவும் இது இந்தியாவிற்கு வருகைபுரிந்த மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 17.1 சதவிகிதம் ஆகும்.



**கோவிட் பெருந்தொற்றிலிருந்து மீளுதல்**

கோவிட் கட்டுப்பாடுகளை பின்பற்றி புதுமையான சுற்றுலா மேம்பாட்டு உத்திகளை செயல்படுத்துதல், தமிழ்நாடு அரசு மிகப்பெரிய அளவில் நடத்திய கோவிட் தடுப்பூசி முகாம்கள் முதலியன சுற்றுலாவின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் விருந்தோம்பல் பிரிவிற்கும் பயனளித்தது. தீவிரமான கோவிட் கட்டுப்பாடுகளான, கட்டாய உடல் வெப்பநிலை பரிசோதனை, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், கிருமிநாசினி மூலம் சுகாதாரத்தை பேணுதல், இணையவழி நுழைவு சீட்டு வழங்குதல், மின்னணு முறையில் பணம் பெறுதல் மற்றும் சிறப்பான முறையில் மக்களின் கூட்ட நெரிசலை கையாளுதல் முதலியன சுற்றுலாப் பயணிகளுக்கும் சுற்றுலாத் தொழில் முனைவோர்களுக்கும் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

சுற்றுலாவில் பாதுகாப்பான சுற்றுச்சூழலை உருவாக்குவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு அரசால், "கொரோனா பெருந்தொற்று கட்டுப்பாட்டு தளர்வுகளுக்குப்பின் சுற்றுலாப் பிரிவுகளை மீட்டெடுக்கும் திட்டத்திற்கு" குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் சுகாதாரத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியன பெருந்தொற்றுக்குப்பின் சுற்றுலாவினை மீட்டெடுக்க உதவியது.

**5. பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்:**

துடிப்பான கலாச்சார பாரம்பரியத்திற்கு தமிழ்நாடு நன்கு அறியப்பட்டதாகும். தமிழ்நாட்டின் சிறந்த கலாச்சாரம், கலை, கட்டடக்கலை, பாரம்பரியம், கைவினைப் பொருட்கள், உணவு வகைகள் மற்றும் பிற சிறப்பம்சங்களை காட்சிப்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள் சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.



**5.1. சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்படும் விழாக்கள்:–**

**5.1.1 இந்திய நாட்டிய விழா**

புகழ்பெற்ற 'இந்திய நாட்டிய விழா' ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் மாமல்லபுரத்தில் நடத்தப்படுகிறது. இவ்விழாவில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து பல நாட்டியக் கலைஞர்கள் பங்கு பெற்று சிறப்பித்து வருகின்றனர். இந்நாட்டிய விழாவினை நேரில் கண்டுகளிக்க, ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்திற்கு வருகை புரிகின்றனர். இச்சிறப்புமிக்க இந்திய நாட்டிய விழா–2021–2022 மாமல்லபுரம் கடற்கரை கோயில் வளாகத்தில் 23.12.2021 முதல் 23.01.2022 வரை நடைபெற்றது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 600–க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற மற்றும் வளர்ந்து வரும் கலைஞர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

இவ்விழாவில் 80–க்கும் மேற்பட்ட பாரம்பரிய, நாட்டுப்புற இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் 30 நாட்களுக்கு மேலாக நடைபெற்றது.

### 5.1.2 நம்ம ஊரு திருவிழா

தமிழ்நாட்டின் பல்வேறு பாரம்பரிய நாட்டுப்புற கலைகளை வெளிப்படுத்தும் வகையில், சென்னை தீவுத்திடலில் 20.03.2022 அன்று சுற்றுலாத் துறையும், கலைப் பண்பாட்டுத் துறையும் இணைந்து "நம்ம ஊரு திருவிழா" என்ற ஒரு மாபெரும் நாட்டுப்புற கலைநிகழ்ச்சியை நடத்தியது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 500–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் 30 வகையான நாட்டுப்புற நடனங்களில் பங்கேற்றனர்.

கட்டை கூத்து, கொம்பு இசை, தோல்பாவை கூத்து, சிலம்பாட்டம், புலி ஆட்டம், காவடி ஆட்டம் மற்றும் மரக்கால் ஆட்டம் என பல்வேறு பாரம்பரிய நாட்டுப்புற இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை பரவசப்படுத்தின. மேலும், அம்மன்



நிகழ்ச்சி, பறை ஆட்டம், கரகாட்டம், காளை ஆட்டம், மயில் ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், தேவர் ஆட்டம், சாட்டை குச்சி ஆட்டம், ஜிக்காட்டம், தோடர் ஆட்டம் மற்றும் சேர்வை ஆட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### 5.1.3 கோடைவிழாக்கள்

கோடை காலங்களில், தமிழ்நாட்டின் முக்கிய கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் நிலவும் ரம்மியமான தட்பவெப்ப நிலையை அனுபவிக்கவும், கண்கவர் இயற்கை அழகை ரசிக்கவும் வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்காக கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளும் வாய்ப்பாக சுற்றுலாத் தலங்களில் வருடம் முழுவதும்

குறிப்பிடத்தக்க அளவிலான எண்ணிக்கையில் சுற்றுலா விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**5.1.4. விழாக்கள் குறித்த விவரங்கள்: (2021–2022)**

| விழாக்களின் பெயர் | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| உலக சுற்றுலா தினம் | செப்டம்பர் 2021 |
| 75வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழா, வேலூர் | டிசம்பர் 2021 |
| இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் | டிசம்பர் 2021 |
| பொங்கல் விழா 2022, புதுதில்லி | ஜனவரி 2022 |
| ஜல்லிக்கட்டு விழா | ஜனவரி 2022 |
| காற்றாடி திருவிழா 2022, தூத்துக்குடி | பிப்ரவரி 2022 |
| 75வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழா, கிருஷ்ணகிரி | மார்ச் 2022 |
| நம்ம ஊரு திருவிழா, சென்னை | மார்ச் 2022 |
| 8வது ஆண்டு உலக தமிழர் விழா, சென்னை | மார்ச் 2022 |



**5.2. உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல்**

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தொழில் முனைவோர்களுடன் புரிந்துணர்வை உருவாக்குவதற்கும், உள்நாட்டுப் பயணச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்கிறது. பல்வேறு மாநில சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்ற சுற்றுலா நிறுவனங்கள் இந்த பயணச் சந்தைகளை ஏற்பாடு செய்கின்றன. இப்பயணச் சந்தைகள் தமிழ்நாட்டை மிக முக்கியமான மற்றும் விரும்பதக்க சுற்றுலாத் தலமாக நிலைநிறுத்துவதற்கு உதவுகின்றன.

**5.2.1. உள்நாட்டு பயணச்சந்தைகள்/ கண்காட்சிகள் (2021–2022)**

| உள்நாட்டு பயணச் சந்தை / கண்காட்சி | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| பயணம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் குறித்த இணைய வழி இரண்டாவது மெய்நிகர் கூட்டம் | ஆகஸ்டு 2021 |

| | |
|---|---|
| கோவலாங் கிளாசிக் 2021, Surf Turf, சென்னை | ஆகஸ்டு 2021 |
| சர்வதேச சுற்றுலா மாநாடு மற்றும் பயண விருதுகள் விழா, புதுடெல்லி | ஆகஸ்டு 2021 |
| வாவ் தமிழ்நாடு 2022 இணைய வழி புகைப்பட போட்டி | செப்டம்பர் 2021 |
| பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), கொல்கத்தா | செப்டம்பர் 2021 |
| இந்திய சர்வதேச பயண சந்தை (IITM), சென்னை | அக்டோபர் 2021 |
| இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி (IITF), புதுடெல்லி | நவம்பர் 2021 |
| இந்திய சர்வதேச பயண சந்தை, புனே | நவம்பர் 2021 |
| இந்திய பயண சந்தை, ஜெய்ப்பூர் | டிசம்பர் 2021 |
| சென்னை போட்டோ பினாலேயின் ஒரு பகுதியான கீழடி தொல்லியல் கண்காட்சி | டிசம்பர் 2021 |
| அவுட்பவுண்ட் பயண சந்தை (OTM), மும்பை | மார்ச் 2022 |
| பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), சென்னை | மார்ச் 2022 |



**5.3. சர்வதேச பயணச்சந்தைகள்**

தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களை புகழ்பெற செய்யவும், நமது துடிப்பான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தவும், சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்று வருகிறது. தமிழ்நாட்டின் சுற்றுலாத் தொழில் புரிவோர்களான தங்கும் விடுதியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள் இணை பங்கேற்பாளர்களாக சுற்றுலாத் துறையுடன் இணைந்து இந்த பயணச் சந்தைகளில் கலந்துகொள்கின்றனர். இச்சந்தைகளில் பல்வேறு சுற்றுலாத் தொழில் புரிவோர்கள் தங்கள் வணிகம் சார்ந்த சந்திப்புகளை சுற்றுலா அரங்கில் நடத்துகின்றனர். இதன் விளைவாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை கணிசமாக உயர்ந்துள்ளது.

### 5.3.1. சர்வதேச பயணச் சந்தைகள்/ கண்காட்சிகள் 2021–2022

| சர்வதேச பயணச் சந்தை / கண்காட்சி | மாதம் மற்றும் வருடம் |
|---|---|
| சர்வதேச பலூன் திருவிழா, லியோன், மெக்சிகோ | நவம்பர் 2021 |
| எக்ஸ்போ 2020, துபாய் | மார்ச் 2022 |

**சர்வதேச பலூன் திருவிழா:**

மெக்சிகோவின் லியோன் நகரில் 12.11.2021 முதல் 15.11.2021 வரை நடைபெற்ற சர்வதேச பலூன் திருவிழாவில் முதன்முறையாக இந்தியா சார்பில் தமிழ்நாடு பங்கேற்றது. இந்த நிகழ்வின் போது மூவர்ணக் கொடி, உன்னதமான இந்தியா மற்றும் தமிழ்நாடு சுற்றுலாவின் சின்னங்களை கொண்ட வெப்பக் காற்று பலூன்கள் வானை அலங்கரித்தது. இந்நிகழ்வு தமிழகத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாக பிரபலப்படுத்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்த நிகழ்வில் 60–க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.



**எக்ஸ்போ 2020 துபாய்:**

மார்ச் மாத கடைசி வாரத்தில் துபாய் எக்ஸ்போ 2020–ல் தமிழ்நாடு பங்கேற்றது. இந்திய அரங்கில், தமிழ்நாடு வார கொண்டாட்டங்களின் போது மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. சுற்றுலா அமைச்சகத்தின் "இந்தியாவில் குணப்படுத்துதல்" (Heal in India) என்ற பிரச்சாரத்திற்கான குழு விவாதத்தின் போது, தமிழ்நாட்டில் மருத்துவ மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவின் சாத்தியக்கூறுகள் குறித்த விளக்கக்காட்சி காண்பிக்கப்பட்டது.

கொரோனா பரவலின் காரணமாக 2021–2022 ஆம் ஆண்டில், பல்வேறு சர்வதேச சுற்றுலாச் சந்தை மற்றும் கண்காட்சிகள் நடைபெறவில்லை.

### 5.4. விருதுகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2021–2022 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகளை வென்றுள்ளது:

1. ஏழாவது ITCTA கண்காட்சி மற்றும் மாநாட்டின் ஒரு பகுதியாக 20.08.2021 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா மாநாடு மற்றும் பயண விருதுகளில் (ITCTA) "ஆன்மீக மற்றும் கோயில் சுற்றுலாவை" ஊக்குவித்ததற்கான விருதினை வென்றது.

2. இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2021 விழாவை இந்தியா டுடே குழுமம் 12.11.2021 அன்று புதுடெல்லியில் நடத்தியது.
   அ. சிறந்த மலைப்பகுதி வகைப்பாட்டிற்கான விருதை தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூருக்கும்,
   ஆ. சிறந்த விழா கொண்டாட்ட தலத்திற்கான விருதினை பொங்கல் விழாவிற்கும்,



   இ. இயற்கை எழில் கொஞ்சும் சாலை வகைப்பாட்டிற்கான விருது நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைக்கும் வழங்கப்பட்டது.

3. 16.03.2022 அன்று மும்பையில் நடைபெற்ற அவுட்பவுண்ட் சுற்றுலா சந்தையில் "சிறந்த சுற்றுலா அரங்க வடிவமைப்பு மற்றும் அலங்காரத்திற்கான" விருதை தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றது.

4. பசிபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கம் (PATWA) 28.03.2022 அன்று புதுடெல்லியில் நடத்திய சஃபாரி இந்தியா தெற்காசிய சுற்றுலா விருதுகள் 2021–ல் "ஆன்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதை தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றது.

### 6. உலக சுற்றுலா தினக் கொண்டாட்டங்கள்

உலக சுற்றுலா தினம், செப்டம்பர் 27 அன்று கொண்டாடப்படுகிறது, இது சுற்றுலாவின் சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதார தாக்கங்கள்

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பால் (UNWTO) அறிவிக்கப்பட்ட சர்வதேச தினமாகும். **"உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சுற்றுலா"** என்பது 2021 ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களுக்கான கருப்பொருளாகும்.

2021, உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, சுற்றுலாத் துறையானது சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சிறப்பு நிகழ்ச்சிகளை அனைத்து மாவட்டங்களிலும் நடத்தியது. உலக சுற்றுலா தினத்தையொட்டி தமிழகம் முழுவதும் கலாச்சார விழாக்கள், தூய்மைப் பிரச்சாரங்கள், கருத்தரங்குகள் மற்றும் சிறப்புக் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

2021, உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக பின்வரும் நிகழ்வுகள் சென்னையில் நடைபெற்றன:



1. சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பாரம்பரிய நடைபயணம்.

2. பிற மாநிலங்களிலுள்ள பிரபலமான ஊடகவியலாளர்களை தமிழ்நாட்டில் அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களுக்கு பேருந்தில் அழைத்துச் செல்லும் பிரச்சார துவக்கவிழா (Influencers on Wheels) 27.09.2021 அன்று தீவுத்திடலில் நடைபெற்றது.

3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஹோட்டல்களில் தடையற்ற முன்பதிவு செய்வதற்காக, முன்னணி பயண ஒருங்கிணைப்பாளர்களின் இணைய தளங்களில் ஹோட்டல் தமிழ்நாடு குறித்த விவரப் பட்டியலை வெளியிடுதல்.

4. "வாவ் தமிழ்நாடு" புகைப்பட மற்றும் காணொளி போட்டி துவக்குதல்.

5. மாநிலத்தின் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தவும், விளம்பரப்படுத்தவும்

"ஆக்மென்டட் ரியாலிட்டி" (Augmented Reality) அடிப்படையிலான அஞ்சல் அட்டைகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை வெளியிடுதல்.

6. மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கான விளம்பர காணொளிகளை வெளியிடுதல்.

## 7. பொங்கல் சுற்றுலா விழா

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா அலுவலர்களால் பொங்கல் சுற்றுலா விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழகத்தின் பாரம்பரிய கலாச்சார திருவிழாவான பொங்கல் விழாவில் ஏராளமான உள்நாட்டு/வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கலந்து கொண்டு மகிழ்ந்தனர்.



## 8. சர்வதேச விளம்பரங்கள்

### 8.1 தமிழ்நாட்டினை விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக இந்திய தூதரகங்கள் மூலம் விளம்பரப்படுத்துதல்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், இந்தியாவின் சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்த, மத்திய சுற்றுலா அமைச்சகம் 20 இந்திய தூதரகங்களில் சுற்றுலா அதிகாரிகளை நியமித்துள்ளது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், மலேசியா, மியான்மர், ஓமன், போர்ச்சுகல், ரஷியா, சிங்கப்பூர், தென்கொரியா, ஸ்பெயின், இலங்கை, தாய்லாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய இருபது நாடுகளிலிருந்து அதிக சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகைபுரிகின்றனர்.

தமிழ்நாட்டை சர்வதேச அளவில் விரும்பத்தக்க சுற்றுலா மாநிலமாக நிலைப்படுத்துவதற்காக மேற்கண்ட இருபது இந்திய தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு அரசு செயல்பட்டு

வருகிறது. இந்த நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா அதிகாரிகள் மற்றும் சுற்றுலா பங்குதாரர்களுடன் விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டன. சுற்றுலாத் தலங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விளம்பரப்படுத்தவும் சுற்றுலா கையேடு மற்றும் காணொளிகள் இந்திய தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### 8.2. பிரெஞ்சு சந்திப்பு –2022

பிரான்சிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான கலாச்சார ஒத்துழைப்பு மற்றும் நட்புறவுகளை ஊக்குவிக்க, சுற்றுலாத் துறையானது பாண்டிச்சேரி மற்றும் சென்னையில் உள்ள பிரான்ஸ் துணைத் தூதரகம் மற்றும், சென்னையிலுள்ள Alliance Francaise உடன் இணைந்து மார்ச் 27 முதல் ஏப்ரல் 4, 2022 வரை "பிரெஞ்சு சந்திப்பு –2022"ஐ ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வு பிரெஞ்சு கலாச்சாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தமிழ் நடன வடிவங்கள்



மற்றும் இசையை சர்வதேச பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்தவும் உதவியது.

### 8.3. செக் சுற்றுலாத் துறையுடன் ஒருங்கிணைப்பு

இந்தியாவிற்கும் செக் குடியரசிற்கும் இடையேயான கலாச்சார உறவுகளை மேம்படுத்தவும், சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைப்பு வாய்ப்புகளை ஆராயவும் 29.11.2021 அன்று "தமிழகத்தில் வளரும் வாய்ப்புகள்: செக் சுற்றுலா"என்ற தலைப்பில் ஒரு சுற்றுலா வலையரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பாரம்பரிய, மருத்துவ, ஆரோக்கிய மற்றும் இன்ப பொழுதுபோக்கு சுற்றுலா குறித்து விவாதிக்கப்பட்டது.

### 8.4 வங்காள தேசத்தின் தேசிய தின கொண்டாட்டங்கள்

28.3.2022 அன்று சென்னையில் நடைபெற்ற வங்காள தேச சுதந்திர மற்றும் தேசிய தினக் கொண்டாட்டங்களில் தமிழக அரசின் சுற்றுலாத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு, கலாச்சார உறவுகளை

வலுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுலாவை மேம்படுத்துதல் குறித்தும் வங்காளதேச துணை தூதரக ஆணையருடன் கலந்துரையாடப்பட்டது.

## 9. சுற்றுலா விளம்பரங்கள்

### 9.1 தமிழ்நாடு சுற்றுலா இணையதளம்

தமிழ்நாடு சுற்றுலா இணையதளம், தமிழ்நாட்டின் சுற்றுலா குறித்த தகவல்கள், விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை வழங்கும் ஒருங்கிணைந்த தளமாகும். இத்தளம், தமிழ்நாட்டிற்கு வருகைபுரிபவர்களுக்கு அனைத்து தகவல்களையும் வழங்கும் ஒரு தளமாக விளங்குகிறது. பயணத்திற்கு முன், பயணத்தின் போது மற்றும் அதற்குப் பிந்தைய நிலைகளில், பார்வையாளர்களுக்கு பயனுள்ள உதவிகளை வழங்குவதற்கு இந்த இணையதளம் உதவுகிறது. இணையதளத்தை மேம்படுத்தவும், உலகளாவிய பார்வையாளர்கள் எளிதில் அணுகும் வகையிலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட



இணையதளமாக இதனை நிலைநிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 9.2 விளம்பர காணொளிகள்

முற்போக்கான இந்தியாவின் 75 ஆண்டுகளில், மக்கள், கலாச்சாரம் மற்றும் சாதனைகளை கொண்டாடுவதற்கும், புகழ்பெற்ற வரலாற்றை நினைவுகூறும் வகையில், "75 ஆம் ஆண்டில் இந்தியா – ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்" என்ற திருவிழா ஒன்றிய அரசாங்கத்தினால் தொடங்கப்பட்டது.

இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழக சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தும் வகையில் 75 விளம்பர காணொளிகள் தமிழக சுற்றுலாத் துறையால் வெளியிடப்பட்டன. மனதை மயக்கும் நிலப்பரப்புகள், அற்புதமான கலாச்சார பாரம்பரியம், பிரமிப்பூட்டும் கட்டடக்கலை, அழகிய கடற்கரைகள், ஆர்ப்பரிக்கும்

நீர்வீழ்ச்சிகள், பாரம்பரிய கலை வடிவங்கள், புகழ்பெற்ற கைவினைப் பொருட்கள் மற்றும் உணவு வகைகளை காட்சிப்படுத்துவதன் மூலம் இந்த காணொளிகள், தமிழகத்தை சிறந்த சுற்றுலாத் தலமாக இந்தியாவிலும் உலகெங்கிலும் காட்சிப்படுத்தவும், நிலைநிறுத்தவும் உதவுகிறது.

### 9.3 மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள்

தமிழ்நாடு சுற்றுலா முப்பரிமாண தொழில்நுட்பங்களை கொண்டு முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கான மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்களை உருவாக்கியுள்ளது. தமிழகத்திலுள்ள 5 யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தலங்கள் மற்றும் பிற முக்கிய சுற்றுலாத் தலங்களான பிச்சாவரம், செஞ்சி கோட்டை மற்றும் கைலாசநாதர் கோயில் போன்ற இடங்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



### 9.4 ஆக்மென்டட் ரியாலிட்டி (Augmented Reality) போஸ்ட் கார்டுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள்

சுற்றுலாத் தலங்களின் விரிவாக்கப்பட்ட விளம்பரத்தை எளிதாக்கும் வகையில், ஆக்மென்டட் ரியாலிட்டி (AR) அடிப்படையிலான அஞ்சல் அட்டைகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆக்மென்டட் ரியாலிட்டி அஞ்சல் அட்டைகள், புதிய தொழில்நுட்ப உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு தனித்துவமான கண்ணோட்டத்தின் மூலம் சுற்றுலாத் தலங்களின் அழகை காண உதவுகிறது.

### 9.5 பத்திரிக்கைகளில் விளம்பரங்கள்

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களை பிரபலபடுத்துவதற்காக, சுற்றுலாத் துறையின் மூலம் முன்னணி சுற்றுலாப் பத்திரிக்கைகள், சிறந்த சஞ்சிகைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானப்

பத்திரிக்கைகளில் ஆண்டு முழுவதும் விளம்பரங்கள் செய்யப்படுகிறது.

Auto-X, BW Businessworld பத்திரிக்கை, இந்தியா டுடே (சுதந்திர தின சிறப்பு வெளியீடு), 'குங்குமம்' வார இதழ் (தமிழ்), Outlook இதழ், T3FS பத்திரிக்கையின் சிறப்பு இதழ் (WTM London-2021), The Forecast Front மாதப் பத்திரிக்கை (ஆங்கிலம்) மற்றும் தி வீக் பத்திரிக்கை போன்ற சர்வதேச மற்றும் தேசிய பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

**9.6 ரேடியோ மிர்ச்சி வானொலி பிரச்சாரம்**

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, தமிழ் வானொலி மிர்ச்சியுடன் தமிழ்நாடு சுற்றுலாத்துறை இணைந்து மாநிலத்தின் சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தியது. மிர்ச்சி தமிழ் யூ-டியூப் சேனலில் ஒரு பிரத்யேக ஈர்க்கும் தமிழ்நாடு (Enchanting Tamil Nadu) காணொளி பாடல் வெளியிடப்பட்டது. கோவிட் பெருந்தொற்றிலிருந்து சுற்றுலாவின் மீள்எழுச்சி



குறித்த பார்வை மற்றும் கருத்துக்கள் தொடர்பாக சுற்றுலாத் துறை அலுவலர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் நேரடி ஒலிபரப்பு செய்யப்பட்டது.

**9.7 சமூக ஊடகப் பிரச்சாரங்கள்**

சுற்றுலாத் துறை, மாநிலத்தில் மறைந்துள்ள சுற்றுலா வளங்களை வெளிக்கொணரவும், வளர்ந்து வரும் சுற்றுலாப் பிரிவுகளை மேம்படுத்தவும், பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலான பிரச்சாரங்கள் மூலம் பொதுமக்களை ஈடுபடுத்த தொடங்கியுள்ளது. தனித்துவமான சுற்றுலா நிலைபாடுகளை தமிழ்நாடு வழங்குவதனால் நெடிய சுற்றுலாக்களைக் (Stories never end) கொண்ட மாநிலமாக தமிழகத்தை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு சுற்றுலாவின் முகநூல் பிரச்சாரத்தில் A முதல் Z வரை:** தமிழ்நாடு சுற்றுலாவின் எழுத்துக்களின் கலைகளஞ்சியம் மூலம் அதிகம்

அறியப்படாத சுற்றுலாத் தலங்களின் மகத்துவத்தைக் கொண்டாட சமூக ஊடகங்களில் "A to Z of TN Tourism" என்ற தலைப்பில் ஒரு முகநூல் புகைப்பட போட்டி தொடங்கப்பட்டது. சமூக ஊடகப் பயனர்கள் "Alphabet of the Day" என்று தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அதிகம் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களின் புகைப்படங்களை பகிர்ந்து கொண்டனர். இதன்மூலம் தமிழ்நாடு தனித்துவமான சுற்றுலாத் தலங்களின் களஞ்சியமாக விளங்குகிறது.

**என் தமிழ்நாடு, என் கதை படச்சுருள் போட்டி:**

பல்வேறு படைப்பு படச்சுருள்கள் மூலம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களின் அழகிய சுற்றுலா தலங்களை முன்னிலைப்படுத்த #MyTN MyStory (என் தமிழ்நாடு என்கதை) என்ற தலைப்பில் Instagram–ல் போட்டி தொடங்கப்பட்டது. இந்த போட்டி சமூக ஊடக பயனர்களின் பெரும் பாராட்டையும் முனைப்பான பங்கேற்பையும் பெற்றுள்ளது.



**பிப்ரவரி உணவு பிரச்சாரம்:**

இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூலில் தினமும் ஒரு மாநிலத்தின் சுவையான உணவைக் காட்சிப்படுத்துவதற்காக, பிப்ரவரி மாதத்தில் ஒன்பது நாட்கள் பிப்ரவரி உணவு பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

**She explores Tamil Nadu பிரச்சாரம்:**

மகளிர் தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, மக்கள் பயணம் மேற்கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் #SheExploresTamilnadu என்ற பெயரில் ஒரு சுவாரஸ்யமான சமூக ஊடக பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

**சுற்றுலா வணிகத்தினை (Co–branding) மேம்படுத்தும் கூட்டு முயற்சிகள்:**

மாநிலத்தின் சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தும் வகையில் குறுகிய கால காணொளிகள் யு–டியூப்பில் வெளியிடப்பட்டன.

மாநிலத்தின் வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் முக்கியமான கோவில்கள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள் குறித்த சுற்றுலா, ஒலிநாடா வடிவில் ஸ்டோரி டிரெயில்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட சுற்றுலாப் பயணங்கள் தமிழ்நாட்டின் அதிகம் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களின் பயண அனுபவங்களை பெறுவதற்கு உதவுகின்றன. தமிழ்நாட்டிலிலுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் விதமாக விளக்கமளிக்கும் யூ-ட்யூப் காணொளிகள், 'நெடிய சுற்றுலாக்களைக் கொண்ட மாநிலமாக' தமிழ்நாட்டை உயர்த்த வெளியிடப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாத் துறை Heaven Explorer என்ற யூ-டியூப் சேனலுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிவிட்டர், யு-டியூப், லிங்க்டின் (Linkedin), பின்ரெஸ்ட்(Pinterest) போன்றவற்றிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

### 9.8 Out of Home (OOH) விளம்பரம்

2021-2022-ஆம் ஆண்டில் பல பயனுள்ள விளம்பர யுக்திகளை தமிழ்நாடு சுற்றுலாத் துறை கையாண்டதனால், மாநிலத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவியுள்ளது.

- இரயில் நிலையங்களில் அமைக்கப்பட்ட அகன்ற தொலைக்காட்சித் திரை (LCD TV), இரயில் பெட்டிகளுக்குள் உள்ள ஒளி திரைகள், எக்ஸ்பிரஸ் இரயில் என்ஜின்கள், இருக்கையின் பின்புறமுள்ள உணவு தட்டு மற்றும் ரயில் டிக்கெட்டுகள் ஆகியவற்றில் தமிழ்நாடு சுற்றுலா குறித்து விளம்பரப்படுத்தப்பட்டன. புதுதில்லி, ஆக்ரா, மும்பை சிஎஸ்டி, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் மத்திய ரயில்

நிலையம், அகமதாபாத், ஜபல்பூர், உதய்பூர் உள்ளிட்ட 12 முக்கிய ரயில் நிலையங்களில் தமிழ்நாடு சுற்றுலா பிரச்சார வீடியோக்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

- டெல்லி மெட்ரோவின் 13 நிலையங்களில் ஒளிதிரைகளில் சுற்றுலா விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- மாநிலத்தின் சுற்றுலா வளங்கள் குறித்த சுற்றுலாப் படங்கள் மறுவடிவமைக்கப்பட்டு கோவை விமான நிலையத்தின் உட்புற பல்வேறு பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டன.
- கொச்சின், கோவா, சூரத் மற்றும் வதோதரா விமான நிலையங்களில் ஒளி திரைகளில் தமிழ்நாடு சுற்றுலா விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
- புதுமையான விளம்பர யுக்தியாக வாகனங்களில் பொருத்தப்பட்ட LED திரை மூலம் தருமபுரி, ஈரோடு, தேனி மற்றும் விருதுநகரில் சுற்றுலா விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.



- சென்னை மாநகராட்சியால் நிறுவப்படும் LED திரைகளிலும், சென்னை மாநகர பேருந்துகளிலும் இந்திய நடன விழா–2021–2022 குறித்த விளம்பர பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.
- தனித்துவமான மற்றும் கண்கவர் கூம்பு வடிவ சுற்றுலாத் தலங்களின் புகைப்பட அட்டைகள் சுற்றுலாச் சந்தைகளில் சிறப்பாக வடிவமைத்து அச்சிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.
- தமிழ்நாடு சுற்றுலாவின் வணிகச்சின்னம் மேக்தூத் அஞ்சல் அட்டைகள் மற்றும் தபால் சேமிப்பு வங்கி கணக்கு புத்தகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டன.

## 10. மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (SIHMCT), துவாக்குடி, திருச்சிராப்பள்ளி

'உணவு கைவினை நிறுவனம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்ட மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்

நுட்பவியல் நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள துவாக்குடியில் 01–10–1981 அன்று நிறுவப்பட்டது. ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து நிதியுதவி செய்யும் இந்த நிறுவனத்தை, உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலுக்கான நிறுவனங்களின் தேசியக் குழு (NIHMCT) ஓர் நிறுவனமாக அங்கீகரித்துள்ளது. இந்நிறுவனம் பின்வரும் படிப்புகளில் தரமான பயிற்சியினை அளிக்கிறது:–

- உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில் நுட்பவியல் குறித்த மூன்றாண்டு பட்டப்படிப்பு.
- உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் குறித்த ஒன்றரை ஆண்டு பட்டயப் படிப்பு.
- உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, பேக்கரி



பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் தயாரித்தல் பற்றிய சான்றிதழ் படிப்பு.

மேலும், ஒன்றிய அரசின் **'ஹுனார் சே** ரோஜ்கார்' திட்டத்தின் கீழ் வழக்கமான பயிற்சிகளுடன் குறுகிய காலப் பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்திற்கு அத்தியாவசிய செலவுகள் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ள மாநில அரசால் ஒவ்வொரு ஆண்டும் 5.00 லட்சம் ரூபாய் தொடர் மானியமாக வழங்கப்படுகிறது.

**11. சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு**

சுற்றுலாத் துறையின் கீழ், பாதுகாப்பான மற்றும் சுகமான பயணத்தை உறுதி செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களின் உள்ளூர் மொழியில் முழு தகவல் தொடர்பினை அளித்தல், அவர்களின் வருகையின் போது எதிர்பாராத நிகழ்வுகளில் உதவிகளை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன்

2010–ஆம் ஆண்டு முதல் சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இவ்வமைப்பு மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், ராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து தலங்களில் தற்போது செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள தலைமை சுற்றுலா வார்டன், ஒவ்வொரு தலத்திலும் உள்ள சுற்றுலா வார்டன்களின் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணிக்கிறார்.

## 12. மனித வள மேம்பாடு

பல்வேறு 'சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ்' திட்டத்தின் கீழ், தமிழ்நாடு சுற்றுலாத் துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து மாணவர்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்களை திறன் மேம்பாட்டு பயிற்சியில் சேர்வதற்கு ஊக்குவிக்கிறது.



இந்தத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் பல்வேறு சுற்றுலா தொடர்பான செயல்பாடுகளில் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மேலும் சுற்றுலாத் தொழிலில் மிகப்பெரிய வேலைவாய்ப்பினை பெற அவர்களுக்கு உதவுகின்றன.

### 12.1 திறன் மேம்பாட்டுப் படிப்புகளின் பட்டியல்

| வ. எண். | வேலை | காலஅளவு (மணி நேரத்தில்) | தகுதி |
|---|---|---|---|
| 1. | பயண ஆலோசகர் | 270 | பட்டய படிப்பு |
| 2. | விற்பனை நிர்வாகி | 280 | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | தனித்து செயல்படும் தெருவோர உணவு விற்பனையாளர் | 330 | தொடக்கக் கல்வி |

| | | | |
|---|---|---|---|
| 4. | வீட்டிற்கு உணவு விநியோகிப்போர் | 240 | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 5. | தங்கும் அறை உதவியாளர் | 340 | தொடக்கக் கல்வி |
| 6. | முன் அலுவலகப் பணியாளர் | 435 | 12-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 7. | உணவு மற்றும் பானங்கள் சேவைப் பணியாளர் | 340 | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 8. | இளநிலை சமையலர் | 540 | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 9. | உணவு மற்றும் பானங்கள் சேவை - பணியாளர் | 475 | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 10. | பல்வகை உணவு தயாரிக்கும் சமையலர் | 540 | தொடக்கக் கல்வி |



| | | | |
|---|---|---|---|
| 11. | அறை பராமரிப்பு உதவியாளர் | 290 | தொடக்கக் கல்வி |

**13. சுற்றுலா உள்கட்டமைப்பு**

**13.1 தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்**

சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு, மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள்/இடங்களை கண்டறிந்து மேம்படுத்த, "தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் சுற்றுலா ஆதாரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அனைத்து பங்குதாரர்களின் நிபுணத்துவத்துடன் அடையாளம் காணப்பட்ட சுற்றுலாத் தலங்களின் முழுமையான வளர்ச்சியை அடைய இத்திட்டம் வழிவகுக்கிறது.

2021-2022 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ், பின்வரும் பணிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன:

**13.1.1. சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2021–2022) ஒப்பளிக்கப்பட்ட பணிகள் விபரம்:**

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பல்வேறு வசதிகளுடன் கொல்லிமலையை முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல் | 222.86 |
| 2. | ஜவ்வாது மலையில் பல்வேறு சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல் | 291.80 |
| 3. | முதலியார்குப்பம் படகு இல்லம் மற்றும் கடற்கரை பகுதிகளை மேம்படுத்துதல் | 50.00 |
| 4. | கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை லேசர் முப்பரிமாண தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டுதல் | 1022.00 |
| 5. | மலைவாழிடங்கள், வனப்பகுதிகள் கடற்கரை மற்றும் அணைக்கட்டு பகுதிகளில் சாகசச் சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுச் சூழல் திறந்தவெளி முகாம்கள் ஏற்படுத்துதல் | 1115.00 |
| 6. | பல்வேறு வசதிகளுடன் ஏலகிரியை முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல் | 298.30 |
| 7. | அய்யன் திருவள்ளுவர் சிலை பராமரிப்பு பணிகள் | 100.00 |
| | **மொத்தம்** | **3099.96** |

சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பூம்புகார், ஒகேனக்கல் மற்றும் பிச்சாவரம் ஆகிய இடங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளன.

## 13.2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு

மாநிலத்தில் உள்ள சுற்றுலா மற்றும் சுற்றுலா மையங்களின் விரைவான வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு தற்போதுள்ள "தமிழ்நாடு ஆலோசனைக் குழுவை" "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழு" என மறுசீரமைத்துள்ளது.

## 13.3. சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கான பதிவு மேற்கொள்ள வழிகாட்டுதல்கள்:

சுற்றுலாவை நெறிப்படுத்தி செயல்பாட்டை நிலைப்படுத்தவும், சேவையின் தரத்தை உயர்த்தவும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சுற்றுலா செயல்பாட்டாளர்களாக பதிவு செய்துகொள்ள பின்வரும் வழிகாட்டுதல்களை சுற்றுலாத் துறை உருவாக்கியுள்ளது.



### 1. சாகசச் சுற்றுலா (ஆகாயம், நிலம் மற்றும் நீர்) – வழிகாட்டுதல்கள்:

தற்போது இடங்கள் சார்ந்த சுற்றுலாவிலிருந்து அனுபவ அடிப்படையிலான சுற்றுலாவுக்கு சுற்றுலாத் தொழில் மாறிவருகிறது. மாநிலத்தில் சாகச சுற்றுலா பிரபலமடைந்து வருவதால், தமிழ்நாட்டில் சாகசச் சுற்றுலா செயல்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. மாநிலத்தில் பாதுகாப்பான, அணுகக்கூடிய மற்றும் நிலையான சாகசச் சுற்றுலா நடவடிக்கைகளை நடத்துவதை உறுதிசெய்யவும், செயல்பாடுகளை நெறிப்படுத்தவும், தரப்படுத்தவும், மலையேற்றம், இயற்கை வழி பாதைகள் (Off–Roading), நடைபயணம், ஜிப்லைனிங், பாராகிளைடிங், படகு சவாரி, அலைச் சறுக்கு, ஸ்கூபா டைவிங், பங்கி ஜம்பிங், வெப்பக் காற்று பலூன் சவாரி போன்ற சாகச நடவடிக்கைகளில் ஈடுபடும் சாகசச் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பதிவு செய்து கொள்ள வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**2. கேரவன் சுற்றுலா மற்றும் கேரவன் பூங்காக்களின் வழிகாட்டுதல்கள்:–**

கேரவன் சுற்றுலா அதன் நெகிழ்வுத்தன்மை, வசதி மற்றும் பாதுகாப்பு காரணமாக உலகளவில் பெரும் புகழ் பெற்றுள்ளது. இந்த முக்கிய சுற்றுலாப் பிரிவு இளைஞர்கள், குடும்பங்கள், மூத்த குடிமக்கள் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் உட்பட பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. மாநிலத்தில் கேரவன் சுற்றுலாவை மேம்படுத்தவும், கேரவன் பூங்காக்களின் வளர்ச்சியை எளிதாக்கவும், கேரவன் சுற்றுலா நடத்துவோர் மற்றும் கேரவன் பூங்கா நடத்துவோர் பதிவு செய்துகொள்ள விரிவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**3. சுற்றுலா முகாம்கள் – வழிகாட்டுதல்கள்:**

தமிழ்நாட்டில் புதிய அனுபவங்களைத் தேடும் சுற்றுலாப் பயணிகளிடையே சுற்றுலா முகாம்கள் ஒரு பிரபலமான பொழுதுபோக்கு நடவடிக்கையாக உருவெடுத்துள்ளது. சுற்றுலா முகாம்கள் அதிகமாக



பிரபலமடைந்து வருவதால் ஊட்டி, கொடைக்கானல், ஏலகிரி போன்ற பிரபலமான மலைவாசஸ்தலங்களில் சுற்றுலா முகாம்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முகாம் நடத்துபவர்கள் பதிவு செய்து கொள்வதற்கு மற்றும் முகாம் தளங்களை ஸ்டாண்டர்ட் மற்றும் பிரீமியம் என இரண்டு வகைகளாக வகைப்படுத்துவதற்கும் வழிகாட்டுதல்கள் சுற்றுலாத் துறையால் வகுக்கப்பட்டுள்ளன.

**4. பயணியர்கள் தங்கும் வீடு மற்றும் படுக்கை மற்றும் காலை உணவு அமைப்புகள்– வழிகாட்டுதல்கள்:**

உள்ளூர் சமூகங்களில் வசிப்பவர்களின் உண்மையான கலாச்சாரம் மற்றும் விருந்தோம்பலை ஆராய சுற்றுலாப் பயணிகளுக்கு பயணியர்கள் தங்கும் வீடு (ஹோம்ஸ்டே) வாய்ப்பளிக்கின்றன. பயணியர்கள் தங்கும் வீடு / படுக்கை மற்றும் காலை உணவு அமைப்புகள், முழு அளவிலான ஹோட்டல்கள் கிடைக்காத சுற்றுலாத் தலங்களில் விருந்தோம்பல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான சிறந்த

வழிமுறையாக உருவெடுத்துள்ளது. பயணியர்கள் தங்கும் வீடு மற்றும் படுக்கை மற்றும் காலை உணவு அமைப்புகளை பதிவு செய்து கொள்வதற்கும், இந்த அமைப்புகளை தங்கம் மற்றும் வெள்ளி என இரண்டு பிரிவுகளாக வகைப்பாடு மற்றும் மறு வகைப்பாடு செய்தவற்கான வழிகாட்டுதல்கள் சுற்றுலாத் துறையால் வகுக்கப்பட்டுள்ளன.

**13.4. 300 தலங்களுக்கான பெருந்திட்டம்**

மாநிலம் முழுவதும் உள்ள 300 சுற்றுலாத் தலங்களுக்கான பெருந்திட்டம் சுற்றுலாத் துறையால் வகுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் தரம், பாதுகாப்பு மற்றும் பிற வசதிகள் ஆகியவற்றில் சர்வதேச தரங்களுக்கு இணையான உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான கட்டமைப்பை இந்த பெருந்திட்டம் வழங்குகின்றன.



**13.5. சுற்றுலா விருதுகள்**

சுற்றுலாவை மேம்படுத்தவும், சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் தீவிரமாகப் பங்காற்றும் பல்வேறு சுற்றுலாப் பங்குதாரர்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில சுற்றுலா விருதுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த விருதுகள் ஆண்டுதோறும் செப்டம்பர் 27–ஆம் தேதி உலகச் சுற்றுலா தினத்தில் வழங்கப்படும். சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், விமான நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள், வழிகாட்டிகள் போன்ற பல்வேறு பங்குதாரர்களை உள்ளடக்கிய 17 பிரிவுகளுக்கு சுற்றுலா விருதுகள் வழங்கப்படும். இந்த ஆண்டு, தமிழ்நாடு மாநில சுற்றுலா விருதுகளின் முதல் நிகழ்வு செப்டம்பர் 27, 2022 அன்று நடைபெறும்.

**13.6 ஒன்றிய அரசின் நிதி உதவித் திட்டம்**

**13.6.1. சுவதேஷ் தர்ஷன் திட்டம்**

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் (MoT, GoI) கருப்பொருளின் அடிப்படையிலான சுற்றுலா

சுற்றுகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு, அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலாத் தலங்களில் திட்டமிடப்பட்ட மற்றும் முன்னுரிமை முறையில் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் வகையில், தமிழக கடலோர சுற்றுலா சுற்றினை மேம்படுத்த ரூ.73.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் உள்ள மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மாமல்லபுரம் கடற்கரை, ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம் கடற்கரை, தூத்துக்குடி மாவட்டத்தில் குலசேகரப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, தெற்குருச்சி மற்றும் மணக்குடி முகத்துவாரம்



ஆகியவை இந்த சுற்றுலாச் சுற்றின் கீழ் உருவாக்கப்பட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களாகும். இத்திட்டத்தின் கீழ் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

## 14. முன்மொழியப்பட்ட திட்டங்கள்

### 14.1. 'பிரசாத்' (PRASAD) திட்டத்தின் கீழ் ராமேஸ்வரம் மேம்பாடு

ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் (MoT, GoI) நன்கு திட்டமிடப்பட்ட சுற்றுலா உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட யாத்திரைத் தலங்களின் சுற்றுலா ஈர்ப்பினை மேம்படுத்த "புனித யாத்திரை புத்துயிர் மற்றும் ஆன்மீக, பாரம்பரிய பெருக்க இயக்கம் (PRASHAD)" திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், விரிவான மேம்பாட்டிற்காக ராமேஸ்வரம் அடையாளம் காணப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை ஆலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்துரு நிதி அனுமதிக்காக இந்திய அரசின் சுற்றுலா

அமைச்சகத்தால் கொள்கை ரீதியாக ஒப்புதல் பெற்றுள்ளது.

### 14.2 மாமல்லபுரத்தை ஒரு அடையாளச் சின்னமாக (Iconic Site) மேம்படுத்துதல்

ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சகம், மேம்பாட்டிற்கான முக்கியத் தலங்களில் ஒன்றாக மாமல்லபுரத்தை கண்டறிந்து, அதற்கான ஆரம்ப திட்ட அறிக்கை ஒரு ஆலோசகர் மூலம் ரூ.461.22 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. இந்த திட்ட அறிக்கை ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீட்டிற்காக பரிசீலனையில் உள்ளது.

### 15. மாநில சுற்றுலாக் கொள்கை

சுற்றுலா தொழிற்துறையை ஒரு பெரிய பொருளாதாரத் துறையாக மாற்றுவதற்கும், அதிக வேலைவாய்ப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சுற்றுலாக் கொள்கையைத் தொடங்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இக்கொள்கை சுற்றுலாத் துறைக்கு தொழில் துறை மதிப்பினை



வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், சுற்றுலாத் துறையில் தனியார் முதலீடு மற்றும் பங்கேற்பை எளிதாக்குவதற்கு செயல்திட்டங்கள், ஊக்கத்தொகைகள் மற்றும் தேவையான ஒழுங்குமுறை சீர்திருத்தங்களை முன்மொழிகிறது. இந்தக் கொள்கையானது தமிழ்நாட்டில் ஒரு நிலையான சுற்றுலா சூழலை உருவாக்குவதுடன் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் உயர்தர அனுபவத்தை வழங்குவதற்கும், சுற்றுலாவில் முதலீடு செய்வதற்கும் நம்பிக்கையான மற்றும் உகந்த சூழலை உருவாக்குவதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

### 16. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பயணிகளுக்கு தேவையான தங்குமிட வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு தொகுப்பு சுற்றுலாக்களை நடத்தவும், படகு குழாம்கள் இயக்கவும், பொருட்காட்சி மற்றும் திருவிழாக்களை நடத்தவும் 30.06.1971 அன்று நிறுவப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா

வளர்ச்சிக் கழகம் பொன்விழாவினை இந்தாண்டு சிறப்பாக கொண்டாடியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் 53 ஓட்டல்கள் மற்றும் 14 சொகுசு பேருந்துகள் உள்ளன. மேலும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற கோடைவாழிடங்களில் மாணவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் தேவைகளை குறைந்த செலவில் (Budget Tourist) நிறைவு செய்திட இளைஞர் விடுதிகளை நடத்துகிறது. தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்ட சில ஓட்டல்களைத் தவிர, இதர ஓட்டல்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

**17 . ஓட்டல் பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 53 ஓட்டல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்தும், மற்ற ஓட்டல்களை தனியாருக்கு குத்தகைக்கும் விட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் / விருந்தினர்களின்



எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும், சேவைகளையும் மேம்படுத்துவதற்காக நிலையான நடவடிக்கைகளையும், உறுதியான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவு, செயல் மற்றும் மேலாண்மை திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

ஓட்டல் தமிழ்நாடு இராணிப்பேட்டை, குன்னூர் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றின் குத்தகை காலம் நிறைவடைந்த நிலையில், இவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளது. ஓட்டல் தமிழ்நாடு இராணிப்பேட்டை மற்றும் குன்னூர் ஓட்டல்கள் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 17.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை மேம்படுத்துதல்

2021–2022–ஆம் ஆண்டில் கீழ்கண்ட ஓட்டல்கள் புதுப்பிக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டது.

1. கடற்கரை ஓய்வு வளாகம், மாமல்லபுரம்
2. ஓட்டல் தமிழ்நாடு, மதுரை–II
3. ஓட்டல் தமிழ்நாடு, திருச்செந்தூர்
4. ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரி
5. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூர்

## 18 . படகு குழாம்கள்

படகு சவாரி மற்றும் சாகச நீர் விளையாட்டுகள் நடத்துவதற்கு உகந்த பல நீர்நிலைகளை உள்ளடக்கிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம்



மற்றும் குற்றாலம் ஆகிய 8 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது.

### 18.1 படகு குழாம், முட்டுக்காடு

முட்டுக்காடு படகு குழாமானது, சென்னையில் வசிக்கும் மக்களின் வார விடுமுறை நாட்களை கழிப்பதற்கு மிகச் சிறந்த பொழுதுபோக்கு தலமாக விளங்குகிறது. முட்டுக்காடு உப்பங்குழியில் அமைந்துள்ள இந்த படகு குழாமின், சாகச நீர் விளையாட்டுகள் மெய் சிலிர்க்கும் அனுபவத்தைத் தருகிறது. சுற்றுலா பயணிகள் நாள் முழுவதும் செலவிடக்கூடிய வகையில் இயந்திர படகு, துடுப்புப் படகு, விரைவுப் படகு மற்றும் வாட்டர் ஸ்கூட்டர்கள் போன்ற படகுகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக நீர் மிதி வண்டி மற்றும் குழந்தைகளுக்கான மிதிப்படகும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 18.2 படகு குழாம், முதலியார்குப்பம்

சென்னையிலிருந்து 92 கி.மீ தொலைவிலும் மாமல்லபுரத்திற்கு தெற்கே 36 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ள இந்த படகு குழாம் "மழைத்துளி படகு குழாம்" என்றும் அழைக்கப்படுகிறது. முதலியார்குப்பம் மிகவும் இயற்கையான சூழலில் அமையப்பெற்று, பறவைகளைப் பார்வையிடுவோர்களின் சொர்க்கமாகவும் மற்றும் சுற்றுலாப் பயணிகள் புத்துணர்வு பெறும் தலமாகவும் விளங்குகிறது.

ஓடியூர் ஏரியை ஒட்டியுள்ள வண்ணமயமான கடற்கரை தீவிற்கு இயந்திர படகு மூலம் சென்று வர ஏற்பாடு செய்து தரப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் இந்த தீவில் சில மணி நேரம் தங்கி இயற்கை சூழலை கண்டுகளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது இந்த படகு குழாமின் சிறப்பம்சமாகும். படகில் பயணிக்கும் பொழுது புலம்பெயர் பறவைகளை கண்டுகளித்தும் மற்றும் படகு குழாம் உணவகத்தில் சுவையான கடல் உணவுகளை உண்டு சுவைத்தும் மகிழலாம். நீர் விளையாட்டு



வசதிகள் கொண்ட முதலியார்குப்பம் படகு குழாமில் விசைப்படகு, மிதிப்படகு, ஓரிருக்கை படகு (Kayak), வாழைப்பழ வடிவிலான படகு, வாட்டர் ஸ்கூட்டர், இயந்திர படகு மற்றும் அதிவேக ஜெட் ஸ்கி (Jet Ski) போன்ற படகுகள் உள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக புதிய வகையான கேனோ படகு (Canoe Boat) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வண்ணம், சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் விளையாட்டுகள் அமைக்கப்பட்டு முதலியார் குப்பம் படகு குழாமானது தனித்துவமான பொழுதுபோக்கு தலமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 18.3 படகு குழாம், உதகமண்டலம்

"மலைகளின் ராணி" என்று அழைக்கப்படும் உதகமண்டலத்தின் மையப் பகுதியில் 85 ஏக்கர் பரப்பளவில் உள்ள ரம்மியமான உதகமண்டல ஏரியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் படகு

குழாம் அமைந்துள்ளது. இந்த படகு குழாமில் மிதி படகு, துடுப்பு படகு மற்றும் விசைப்படகு போன்ற படகுகள் பிரதான சுற்றுலா அம்சமாக உள்ளது. மேலும், படகு குழாமில் நாவிற்கு இனிய சுவையான உணவகமும் உள்ளது. நீர் விளையாட்டுகளுடன் அழகான பூங்காவையும் இயற்கை எழில்களையும் கண்டுகளிக்க சிறிய தொடர்வண்டி வசதியும் இந்த படகு குழாமிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. மாநிலத்தில் சாகச சுற்றுலாவினை ஊக்குவிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டல படகு இல்லத்தில் கூடாரம் அமைத்து சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம்கள் மூலமாக சுற்றுலாப் பயணிகளுக்கு மாற்று பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தவுள்ளது.

**18.4 படகு குழாம், பைக்காரா**

உதகமண்டலம் – மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 21 கி.மீ தொலைவில் அடர்ந்த காடுகளின் நடுவே பைக்காரா நீர்த்தேக்கம்,



எழில் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகு, அதிவேகப் படகு போன்ற படகுகள் மற்றும் உணவகம் ஆகியவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயக்கப்படுகின்றன. இந்த படகு சவாரி, அந்த பகுதியின் இயற்கை எழிலை முழுமையாக அனுபவிக்க ஏதுவாக உள்ளது. இங்கு உள்ள உணவகத்தில் சுவையான சிற்றுண்டிகள் மற்றும் திண்பண்டங்கள் வழங்கப்படுகின்றன. இந்தாண்டு சுற்றுலா பயணிகளின் கூடுதல் வசதிக்காக இரண்டு புதிய அதிவேக படகுகள் வாங்கப்பட்டுள்ளது.

**18.5 படகு குழாம், கொடைக்கானல்**

"மலைகளின் இளவரசி" என்று அழைக்கப்படும் கொடைக்கானல், ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கு இரண்டு படகு குழாம்களை நடத்துகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணமாக, 59 ஏக்கர்

நிலப்பரப்பில் நட்சத்திர வடிவிலான ஏரியில் இப்படகு இல்லம் அமைந்துள்ளது. மேலும், நவீன நீர்சாகச விளையாட்டு உபகரணங்களான நீர்மிதிவண்டி (Water Cycle) மற்றும் கேனோ படகு (Canoe Boat) ஆகியவை சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 18.6 படகு குழாம், ஏற்காடு

கிழக்குத் தொடர்ச்சி மலையில் சேர்வராயன் மலைத் தொடரில் "தென்னகத்தின் அணிகலன்" என அழைக்கப்படும் ஏற்காடு அமைந்துள்ளது. தொலை தூரங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் முக்கிய சுற்றுலாத் தலமாக, 28.40 ஏக்கர் பரப்பளவில் ஏற்காடு ஏரி அமைந்துள்ளது. மனதை கொள்ளைக் கொள்ளும் இந்த ஏரியில் மிதி படகு, துடுப்பு படகு மற்றும் விசைப்படகு போன்ற படகுகள் உள்ளன. தற்பொழுது இரண்டு மற்றும் நான்கு இருக்கைகள் கொண்ட அன்னப்பறவை வடிவிலான



நவீன மிதிப்படகுகள் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 18.7 படகு குழாம், பிச்சாவரம்

பெரிய அலையாத்தி காடுகள் சூழ்ந்துள்ள பிச்சாவரம் சுற்றுலாத் தலமாகவும் புலம் பெயரும் பறவைகளின் புகலிடமாகவும் திகழ்கிறது. பிச்சாவரம் படகு குழாம் சுமார் 5.27 ஏக்கர் பரப்பளவில் அலையாத்தி காடுகளின் மத்தியில் இயற்கை எழில் கொண்ட காட்சியை ரசித்த வண்ணம் படகு சவாரியை அனுபவிக்க உகந்த இடமாக உள்ளது. தற்பொழுது பிச்சாவரம் படகு குழாமில் உள்ள உணவகம் மற்றும் சமையல் அறையை சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 18.8 படகு குழாம், குற்றாலம்

"தென்னகத்தின் நீருற்று" (Spa of South India) என்று அழைக்கப்படும் தென்காசி மாவட்டத்தில் உள்ள

குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அழகுற அமைந்துள்ளது. கண்களைக் கவரும் இயற்கை எழில்மிகும் காட்சிகள் மற்றும் அருவிகள் நிறைந்த சுற்றுலாத் தலமாக தென்னகத்தில் அமைந்துள்ளது. குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவகாலத்தின் போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக படகு சவாரி வசதிகள் செய்யப்படுகின்றன. இங்கு துடுப்பு படகு, மிதிப்படகு மற்றும் ஓரிருக்கை படகு போன்ற படகுகள் உள்ளன.

### 18.9 தொலைநோக்கி இல்லம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டலத்தில் உள்ள தொட்டபெட்டாவிலும் கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலைவாசஸ்தலங்களிலும் தொலைநோக்கி இல்லங்களை இயக்கி வருகிறது. பரந்து விரிந்த இயற்கை எழில் கொண்ட காட்சிகளையும் பள்ளத்தாக்குகளையும் கண்டுகளிக்க ஏதுவாக உள்ள



தொலைநோக்கி இல்லங்கள், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதியின் மூலம் தொட்டபெட்டா தொலைநோக்கி இல்ல சிற்றுண்டி கூடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

### 18.10 நீலக்கொடி கடற்கரை, கோவளம்

கோவளம் கடற்கரை சென்னையிலிருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்த கோவளம் கடற்கரை டென்மார்க்கை சேர்ந்த சுற்றுசூழல் கல்விக்கான அறக்கட்டளையின் மூலம் நீலக்கொடி சான்றிதழ் பெற்ற தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவில் 9வது கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 23.10.2021 அன்று செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகத்திடமிருந்து நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

கோவளம் கடற்கரையின் பாதுகாப்பு கண்காணிப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பான நீச்சல் பகுதி, ஆடை மாற்றும் பகுதி, குடிநீர் வசதி, வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு பூங்கா மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் மூங்கிலால் செய்யப்பட்ட நாற்காலிகள், ஊஞ்சல் படுக்கைகள், நிழல் குடைகள், கழிப்பறை தொகுதிகள் மற்றும் குப்பை தொட்டிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உயிர்காப்பு காவலர்கள், காவற்கோபுரம் மேலிருந்து கண்காணிப்பதற்காகவும் மற்றும் அவசரக்கால உதவிக்காகவும் முதலுதவி உதவியாளர்கள் மற்றும் உயிர்காப்பு காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நீலக்கொடி கடற்கரையை சிறந்த பொழுதுபோக்குத் தலமாக பிரபலப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை



மேற்கொண்டு வருகிறது. இதில் ஒரு பகுதியாக சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 05.03.2022 மற்றும் 06.03.2022 ஆகிய நாட்களில் 'கடற்கரை யோகசனம்' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் சென்னை மற்றும் கோவளத்தை சுற்றியுள்ள இல்லத்தரசிகள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவிகள் கலந்துகொண்டனர்.

**19. சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாநிலத்தின் சுற்றுலா வள மேம்பாட்டிற்காக பல்வேறு வகையான சுற்றுலா மற்றும் பயண தொகுப்புகள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அற்புதமான மற்றும் மறக்கமுடியாத பயண அனுபவங்களை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகள்–(4), 35 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதி அல்லாத பேருந்துகள்–(3), 18 இருக்கைகள் கொண்ட

குளிர்சாதன பேருந்துகள்–(3), 45 இருக்கைகள் கொண்ட வால்வோ பேருந்து–(1), 43 இருக்கைகள் கொண்ட வால்வோ பேருந்துகள் –(3) ஆகிய 14 சொகுசுப் பேருந்துகளை இயக்கிவருகிறது. மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும் சுற்றுலாக்களில் ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானதாகும்.

இச்சுற்றுலாக்களைத் தவிர, குழுவாகச் செல்ல விரும்புகின்ற சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஆயத்த சுற்றுலா, அரசு ஊழியர்களுக்கான



விடுப்புப் பயணச் சலுகை சுற்றுலா மற்றும் பள்ளி மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கிறது. திருவொற்றியூர் மீன்பிடி துறைமுகத்திலிருந்து பொழுதுபோக்கு படகு சேவையை ராயல் மெட்ராஸ் உலாப்படகு கிளப்புடன் இணைந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக மீன்வளத்துறையிடம் இருந்து, அடிப்படை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## 19.1 சுற்றுலா தொகுப்புகள்

### 19.1.1 தினசரி திருப்பதி சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்களில் ஒருநாள் திருப்பதி சுற்றுலா மிகவும் பிரபலமானது. திருப்பதி சுற்றுலா செல்லும் சுற்றுலாப் பயணிகளின் தரிசன முன்பதிவிற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆன்லைன் முன்பதிவு முறை திருமலை–திருப்பதி தேவஸ்தானத்தின் (TTD) ஆன்லைன் அமைப்புடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானம்

தற்பொழுது தமிழ்நாட்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொகுப்பு சுற்றுலா மூலம் வரும் பக்தர்களின் நலனுக்காக தினசரி 150 சீக்ர தரிசன சீட்டுகளை வழங்கிவருகிறது.

பக்தர்களின் கூடுதல் தேவையை நிறைவு செய்யும் வகையில், திருமலை-திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்படும் 150 சீக்ர தரிசன சீட்டுகளை அதிகப்படுத்தி ஒதுக்கீடு செய்ய கோரியுள்ளது. கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பின், தமிழ்நாட்டின் முக்கிய மாநகரங்களான மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய இடங்களிலிருந்து தினசரி திருப்பதி சுற்றுலாவினை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 19.1.2 சிறப்பு தரிசன சீட்டுகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஆன்மீக சுற்றுலா தொகுப்பினை மேலும் பிரபலப்படுத்த,



தமிழ்நாட்டில் உள்ள 33 முக்கிய கோயில்களில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஆன்மீக தொகுப்பு சுற்றுலா செல்லும் பயணிகளுக்கு சிறப்பு தரிசன சீட்டுகள் வழங்க இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அனுமதி அளித்துள்ளது.

### 19.1.3 தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களிலிருந்து தொகுப்பு சுற்றுலாக்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொன்விழா ஆண்டினை கொண்டாடும் விதமாகவும், சுற்றுலா பயணிகளின் கூடுதல் தேவைக்காகவும் கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற முக்கிய நகரங்களிலிருந்து சிறப்பு சுற்றுலா தொகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

2021-2022-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக கீழ்கண்ட சுற்றுலா தொகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. பாரம்பரிய நடை பயணங்கள்(Heritage Walks)

சென்னையில் முக்கிய வரலாற்று நினைவுச் சின்னங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக புகழ் பெற்ற வரலாற்று அறிஞர்களுடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்து வரலாறு மற்றும் பாரம்பரியத்தை மையமாக கொண்டு பாரம்பரிய நடை பயணங்களைத் தொடங்கியுள்ளது.

உலக சுற்றுலா தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து பாரம்பரிய நடை பயணத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெற்றிகரமாக நிகழ்த்தியது. காரன் வாலிஸ் விதானம், கோட்டை அருங்காட்சியகம், கவாத்து சதுக்கம், புனித மேரி ஆலயம், வாலாஜா வாயில், புனித ஜார்ஜ் வாயில் மற்றும் புனித தாமஸ் சாலை ஆகிய இடங்களை உள்ளடக்கிய இந்த தொகுப்பு நடை பயணம் சுற்றுலாப் பயணிகளிடையே சிறந்த வரவேற்பு மற்றும் பாராட்டையும் பெற்றது.



2. பாரம்பரிய மிதிவண்டி பயணம் (Heritage Cycling Trails):

சென்னையின் முக்கிய வரலாற்று பாரம்பரிய சின்னங்களை வெளிக்கொணரும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் போர்த்துகீசிய பாதை, அர்மேனியன் பாதை, அமெரிக்கன் பாதை, ஜார்ஜ் டவுன் பாதை ஆகிய நான்கு புதிய பாரம்பரிய மிதிவண்டி பயணங்களை அறிமுகப்படுத்தியது.

3. புகைப்பட நடை பயணங்கள் (Photo Walks)

பண்பாடு, கட்டிடக்கலை மற்றும் பாரம்பரியத்தை கருப்பொருளாக கொண்டு மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்ட புகைப்பட கலை மற்றும் பயிற்சி, தமிழ்நாடு சுற்றுலா வளச்சிக் கழகத்தால் மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில், பாரிமுனையில் உள்ள பூக்கடை, மற்றும் சிந்தாதரிப்பேட்டை நெசவாளர் சந்தை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டது.

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,

சென்னை புகைப்பட பதிவர்கள், நம் வீடு நம் ஊரு நம் கதை மற்றும் சோனி ஆல்பா ஒருங்கிணைந்து ஆர்வமுள்ள மாற்றுத் திறனாளிகளின் புகைப்படத் திறனை மேம்படுத்தி மாநிலம் முழுவதும் பயணம் செய்ய ஊக்குவிக்க மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் புகைப்பட கலையை உள்ளடக்கிய சுற்றுலா 03.12.2021 அன்று சிறப்பாக நடத்தப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி மற்றும் புரிதலுக்காக சைகை மொழிப்பெயர்ப்பாளர்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.

**20. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் முயற்சிகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள், தொகுப்பு சுற்றுலாக்கள் மற்றும் படகு குழாம்களை திறம்பட சந்தைப்படுத்துதல் இப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலாக்களை மேம்படுத்தவும் மற்றும் தங்கும் விடுதிகளின்



வருவாயை அதிகரிக்கவும் பல்வேறு சந்தைப்படுத்தும் உத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ஆர்வலர்களை கவரும் வண்ணம் பாரம்பரிய நடை பயணங்கள், பாரம்பரிய மிதிவண்டி சுற்றுலாக்கள், புகைப்பட நடை பயணங்கள், சுற்றுலா மற்றும் கடற்கரை யோகா போன்ற வார இறுதி பொழுதுபோக்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள் மற்றும் உணவகங்களைப் பிரபலப்படுத்த, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது சமூக ஊடகங்களில் பிரபலமான நபர்களின் (Social Influencers) மூலமாக சந்தைபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருந்தொற்றுக்குப் பிந்தைய சுற்றுலா பயணத்தை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு ஓட்டல்களின் முன்பதிவினை அதிகரிக்கும் வகையில் சிறப்பு தள்ளுபடி சலுகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா தொகுப்புகளை பிரபலபடுத்தவும் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் பல்வேறு மாநில சுற்றுலா இயக்குபவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஓட்டல்களில் "விடுமுறை இல்ல வசதி" திட்டத்தின் கீழ் தங்குவதற்கு மத்திய கலால், இ.எஸ்.ஐ மற்றும் இ.பி.எப்.ஓ நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**20.1 விடுமுறை இல்லம் – முன்வைப்பு விடுதி திட்டம்**

சென்னையில் உள்ள தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், ரூ.70 இலட்சத்தை (உதகமண்டலம் ஓட்டல் தமிழ்நாடு விடுதிக்கு ரூ.35 இலட்சம், கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு விடுதிக்கு ரூ.35 இலட்சம்) 01.05.2020 முதல் 30.04.2022 வரையிலான இரண்டு ஆண்டு காலத்திற்கு, முன்வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளது. தலா இரு படுக்கை வசதி கொண்ட இரு அறைகள் உதகமண்டலம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியிலும்



மற்றும் கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியிலும் இந்நிறுவனத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

மதுரையிலுள்ள தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், ரூ.32 இலட்சத்தை 03.07.2020 முதல் 02.07.2023 வரையிலான 3 ஆண்டுகாலத்திற்கு முன்வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளது. இதற்காக கொடைக்கானல் ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரண்டு அறைகள் இந்நிறுவனத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

சேலத்திலுள்ள தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், ரூ.35 இலட்சத்தை 05.05.2021 முதல் 04.05.2024 வரையிலான 3 ஆண்டுகாலத்திற்கு முன்வைப்புத்தொகையாக செலுத்தியுள்ளது. இதற்காக ஓட்டல் தமிழ்நாடு ஏற்காடு விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரு அறைகள் இந்நிறுவனத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

மதுரையில் உள்ள ஒன்றிய கலால் துறை, ரூ.30.00 இலட்சத்தை இத்திட்டத்தின் கீழ் 01.06.2019 முதல் 30.05.2022 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு, முன்வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளது. இதற்காக "ஓட்டல் தமிழ்நாடு" கொடைக்கானல் விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரு அறைகள் இந்நிறுவனத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவிலிலுள்ள தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் ரூ..50 இலட்சத்தை, 06.12.2020 முதல் 05.12.2022 வரையிலான 2 ஆண்டு காலத்திற்கு முன்வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளது. இதற்காக ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரி விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன வசதி இல்லாத இரு அறைகள் மற்றும் ஒரு குடும்ப அறை இந்நிறுவனத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தின்கீழ் ரூ.217 இலட்சம் வைப்புத்தொகையாக பெற்றுள்ளது.



**21. பொருட்காட்சி பிரிவு:**

தமிழகத்தின் சிறந்த பண்பாடு மற்றும் பாரம்பரியத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு, பொருட்காட்சி மற்றும் திருவிழாக்களை நடத்துதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

**தீவுத்திடல், சென்னை**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுத்திடல் பொருட்காட்சி மைதானம் வருடந்தோறும் புதுமையான நிகழ்ச்சிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்தும் வசதியை கொண்ட மையமாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தீவுத்திடலில் 1974ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை 70 நாட்களுக்கு நடத்தி வருகிறது. கொரோனா பொருந்தொற்று காரணமாக

கடந்த 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளில் மட்டும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நடத்தப்படவில்லை.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால், 22.10.2021 முதல் 05.11.2021 வரை 15 நாட்களுக்கு சென்னை தீவுத்திடலில் "தீபாவளி பட்டாசு சந்தை–2021" நடத்தப்பட்டது.

பத்மவிபூசன் டாக்டர் இளையராஜா அவர்களின் "ராக் வித் ராஜா" நேரடி இசை நிகழ்ச்சி சென்னை தீவுத்திடலில் 18.03.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சி 25,000–க்கும் மேற்பட்ட பார்வையாளர்களை கவர்ந்தது.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை, கலை மற்றும் பண்பாட்டுத்துறையுடன் இணைந்து சென்னை தீவுத்திடலில் "நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சி 21.03.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 500–க்கு மேற்பட்ட நாட்டுப்புற கலைஞர்கள்



கலந்துகொண்டு 30–க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைகளை நிகழ்த்தினர்.

### 22. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்னாளுமை முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மின்னாளுமை முயற்சிகள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை இணையவழி உடன் நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சேனல் மேலாளரை நியமித்து பிரபலமான ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) இணையதளங்களான Makemytrip, Goibibo, Booking.com, etc., உடன் இணைந்து தமிழ்நாடு ஓட்டல்களின் வருவாயை மேம்படுத்த வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னணி ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) இணையதளத்தில் தமிழ்நாடு

ஓட்டல்களை பட்டியலிட்டதன் மூலம் தடையற்ற முன்பதிவிற்கும், உலகளவில் பிரபலப்படுத்தி வருவாயை அதிகரிப்பதற்கும் உதவுகிறது.

இதன் விளைவாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) மூலம் 2,032 முன்பதிவுகள் மற்றும் ரூ.70 இலட்சம் வருவாயையும் செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரையிலான காலக்கட்டத்தில் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களில் ஒரு பின்னூட்ட செயல்முறை (feedback mechanism) அமைப்பை நிறுவியுள்ளது. இது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு உதவியாக உள்ளது. செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 540 வாடிக்கையாளர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டது.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணையதளத்தை புதுப்பித்து, பயனாளிகளுக்கு எளிதில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது டிஜிட்டல் செயல்பாடுகளை சமூக ஊடக கையாளுதல்கள் மூலம் ஓட்டல்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்கள் மற்றும் சுற்றுலாக்களை விளம்பரப்படுத்தி வருகிறது. மேலும், சமூக ஊடக கையாளுதல்களின் மூலம் தர அடையாள விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சமூக ஊடகங்களான ட்விட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் சந்தைப்படுத்துதல் மேம்படுத்தப்பட்டுள்ளது.

## 23. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள்

### 23.1 வாலாங்குளம் ஏரி படகு குழாம்

பறவை மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு விருப்பமான கோயம்புத்தூரில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றாக விளங்கும் வாலாங்குளம் ஏரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக புதிய படகு குழாம் அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பாக கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி நிறுவனத்துடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. சூரிய சக்தி மற்றும் மின்சாரத்தில் இயங்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த படகுகள் இந்த படகு குழாமில் இயக்கப்படவுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.



### 23.2 முதலியார் குப்பம் கடற்கரை தீவில் வசதிகளை மேம்படுத்துதல்

முதலியார் குப்பத்தை உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில், முதலியார் குப்பம் கடற்கரை தீவில் 50.00 இலட்சம் ரூபாய் செலவில் கடற்கரையோர மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலா பயணிகளுக்கான சில கூடுதல் வசதிகளாக நுழைவு வளைவு, சுற்றுச்சூழலுக்கு உகந்த குடில்கள், பனையோலையால் வேயப்பட்ட கூம்பு வடிவ குடில்கள், காத்திருப்பு குடில்கள், பனை மரத்தாலான இருக்கைகள், உணவகங்கள், குளியலறைகளுடன் கூடிய கழிப்பறைகள் அமைக்கப்படும்.

### 23.3 புதிய வகை படகுகள் வாங்குதல்

சுற்றுலா பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தனித்துவமான அனுபவங்களை வழங்குவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக

படகு குழாம்களில் புதுமையான மற்றும் நவீன படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக வாங்கப்பட்ட படகுகளில் புதுமையான மற்றும் நவீன படகுகளான கேனோ படகுகள் (Canoe Boat), நீர் மிதிவண்டி படகு (Water Cycle Boat), குழந்தைகள் மிதிப்படகுகள், அன்னப்பறவை வடிவிலான மிதிப்படகுகள் மற்றும் சோர்பிங் பந்துகள் (Zorbing Balls) ஆகியவை உள்ளடங்கும்.

**24. முடிவுரை**

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது சுற்றுலா தலங்களை மேம்படுத்தவும் மற்றும் தரம் உயர்த்தவும், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தவும் மற்றும் முக்கிய சுற்றுலா பிரிவுகளை பல்வேறு சுற்றுலா பங்களிப்பாளர்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதிபூண்டுள்ளது. பல்வேறு புதிய முயற்சிகள் மற்றும் யுக்திகள் மாநில சுற்றுலாத் துறையால் தொடர்ந்து




மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முயற்சி மேலும் வலுப்படுத்தப்படும். தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் மிகவும் விரும்பி செல்லக்கூடிய சுற்றுலா மையமாக தமிழ்நாடு விளங்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் சுற்றுலாத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டாக்டர் மா. மதிவேந்தன்
சுற்றுலாத்துறை அமைச்சர்

## இணைப்பு-1


### சுற்றுலாத்துறை நிர்வாக அமைப்பு






## இணைப்பு- 2

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிறுவன அட்டவணை



## இணைப்பு-3

### சுற்றுலா அலுவலகங்கள்

### தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. அரியலூர் | 12. மதுரை | 23. திருவண்ணாமலை |
| 2. சென்னை | 13. மாமல்லபுரம் | 24. திருவள்ளூர் |
| 3. கோயம்புத்தூர் | 14. நாமக்கல் | 25. திருவாரூர் |
| 4. சிதம்பரம் | 15. பூம்புகார் | 26. தேனி |
| 5. தர்மபுரி | 16. புதுக்கோட்டை | 27. தூத்துக்குடி |
| 6. ஈரோடு | 17. பெரம்பலூர் | 28. திருப்பூர் |
| 7. காரைக்குடி | 18. இராமேஸ்வரம் | 29. உதகமண்டலம் |
| 8. கன்னியாகுமரி | 19. சேலம் | 30. வேலூர் |
| 9. கொடைக்கானல் | 20. திருச்சிராப்பள்ளி | 31. விருதுநகர் |
| 10. கிருஷ்ணகிரி | 21. திருநெல்வேலி | 32. விழுப்புரம் |
| 11. கரூர் | 22. தஞ்சாவூர் | |



### வெளி மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. புதுடெல்லி
2. ஆக்ரா
3. ஜெய்ப்பூர்
4. கொல்கத்தா
5. மும்பை
6. பனாஜி (கோவா)

## இணைப்பு-4

### சுற்றுலா தகவல் மையங்கள்

| விமான நிலையத்தில் அமைந்துள்ளவை | இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை |
|---|---|
| 1. சென்னை (பன்னாட்டு முனையம்)<br>2. சென்னை (உள்நாட்டு முனையம்)<br>3. கோயம்புத்தூர்<br>4. மதுரை<br>5. திருச்சிராப்பள்ளி<br>6. தூத்துக்குடி<br>7. சேலம் | 1. சென்னை (எழும்பூர்)<br>2. கோயம்புத்தூர்<br>3. மதுரை<br>4. திருச்சிராப்பள்ளி<br>5. திருநெல்வேலி |



| பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை | பிற இடங்களில் அமைந்துள்ளவை |
|---|---|
| 1. சென்னை (கோயம்பேடு) | 1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்)<br>2. இராமேஸ்வரம் (கோவில் வளாகம்)<br>3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு)<br>4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்) |

| வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை |
| --- |
| 1. பெங்களூரு இரயில் நிலையம் (கர்நாடக மாநிலம்)<br>2. ஐதராபாத் (ஆந்திர மாநிலம்)<br>3. திருவனந்தபுரம் (கேரள மாநிலம்)<br>4. அகமதாபாத் (குஜராத் மாநிலம்)<br>5. புவனேசுவரம் (ஒடிசா மாநிலம்) |




29.11.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் அவர்கள் சந்தித்து, புதுதில்லியில் 12.11.2021 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா மாநாடு மற்றும் விருது வழங்கும் விழாவில், தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு சிறந்த மலைகளுக்கான வகைப்பாடு பிரிவில் நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான விருது, சிறந்த விழாவிற்காக தமிழ்நாட்டின் பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான விருது, இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமையப்பெற்ற சாலைக்காக நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைக்கு வழங்கப்பட்ட இரண்டாம் இடத்திற்கான விருது, ஆகிய மூன்று விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.




10.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலை மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை அமைச்சர் அலுவலக முகப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள "கலாச்சார கலைச் சிற்பத்தினை" சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.




மெக்சிகோ நாட்டின் லியோன் நகரில் நடைபெற்ற சர்வதேச பலூன் கண்காட்சியில் இந்திய தேசிய கொடியின் வர்ணத்தில் அமைக்கப்பட்ட "Incredible India" மற்றும் "Enchanting Tamil Nadu" என்ற வாசகம் பொறித்த பலூனை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் பறக்க விட்டனர்.

iv



21.3.2022 அன்று சென்னை தீவுத்திடலில் மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை சார்பில் நடைபெற்ற "நம்ம ஊரு திருவிழா" அருந்தமிழ் கலைகளின் அணிவகுப்பு கலை விழாவினை தொடங்கி வைத்தனர். இவ்விழாவில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சந்தீப்நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

<




நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் எஸ்.எஸ்.எம். கல்லூரி அருகில் சுற்றுலாத் துறையின் சார்பில் 27.01.2022 அன்று நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டியினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். சுற்றுலா இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




சென்னை, தீவுத்திடலில் 27.09.2021 அன்று "உலக சுற்றுலா தினம் 2021"-ஐ முன்னிட்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அரிய வகை சுற்றுலாத் தலங்களை சமூக வலைத்தளங்களில் பிரபலப்படுத்தும் வகையில், சமூக ஊடகங்களில் பிரபலமாக உள்ளவர்களுக்கான சுற்றுலா பயணத்தை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர்.சந்தர மோகன் B.இ.ஆ.ப.,சுற்றுலாத் துறை இயக்குநர்,தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் 23.12.2021 அன்று இந்திய நாட்டிய விழாவினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ அன்பரசன் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடக்கி வைத்து பார்வையிட்டனர். உடன் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி எம்.வரலட்சுமி, சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.எஸ். அரவிந்த் ரமேஷ், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ்.பாலாஜி அவர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B . இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். ராகுல் நாத், இ.ஆ.ப., மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா பயணிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு (26.09.2021) அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் 'புராதான சின்னங்களைப் பார்வையிடும் பாரம்பரிய சுற்றுலா நடைபயணத்தை' மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சந்தர மோகன் B. இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




புதுதில்லியில் 12.11.2021 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா மாநாடு மற்றும் விருது வழங்கும் விழாவில், தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு சிறந்த மலைகளுக்கான வகைப்பாடு பிரிவில் நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான விருது, சிறந்த விழாவிற்காக தமிழ்நாட்டின் பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான விருது, இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமையப்பெற்ற சாலைக்காக நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைக்கு வழங்கப்பட்ட இரண்டாம் இடத்திற்கான விருது, ஆகிய மூன்று விருதுகளை ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சர் திரு. G. கிஷன்ரெட்டி வழங்கினார்கள்.




சென்னை , அண்ணா பல்கலைக்கழக கூட்டரங்கில் (27.09.2021) அன்று "உலக சுற்றுலா தினம் - 2021" முன்னிட்டு Hotel Tamilnadu ஆன்லைன் முன்பதிவினை சுற்றுலா பயணிகளுக்கு மேலும் எளிதாக்கும் விதமாக Online Travel Aggregators உடன் இணைந்து MakeMyTrip, Yatra போன்ற செயலிகள் மூலம் முன்பதிவு செய்யும் வசதியினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.